203

ஜகன் மோகினி

பிப்ரவரி
1953

JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு



முழு நாவலும் இதர முப்பது அம்சங்களும் சேர்ந்த விவித விருந்து வெளியாகிவிட்டது.

நிர்மல நீரோடை

வை. மு. கோ. 108-வது-நாவல்

நிர்மல நீரோடை

வை. மு. கோ. 108 - வது நாவல்

பொருளடக்கம்

முழு நாவல்—நாவல்காயத்ரி
நிர்மலநீரோடை (108)

உண்மைச்சித்திரங்கள்
ஆசையின் அனர்த்தம்
கடவுளின் கருணை
பயங்கரமும் பரிதாபமும்
கரும் இருட்டும் கள்ளனும்
அனுபவப்பள்ளி

சிறுகதைகள்
உதவியின் ஒளி
தியாகி
அண்ணனு, அலகையா?
மறைந்த மாணிக்கம்
யார் குற்றவாளி?

நாடகங்கள்
தடபுடல்
கவியின் கனவு
புகைப்படம்
விசித்ர விவாகம்
பழம் நழுவிப்பாலில்விழுந்தது.

கட்டுரைகள்
உயிர்த்தோழி
அதிசயசந்திப்பின் அமோகவெற்றி
புனிதமூர்த்தியின் பொன்மொழிகள்
அனுபவ ஆசிரியர்
அன்பர்களின் ஆதரவு

பலசரக்குகள்
அதுபேசினுல்—சினிமாபிலிம்
ஹாஸ்யத்துணுக்குகள்
விநோதவிடுகதைகள்
துண்டுதுணுக்குகள்
அனுபவநீதிகள்

கடிதங்கள்
மகனுக்கு
பத்திராதிபருக்கு
நண்பனுக்கு
தொண்டன் ஆசானுக்கு
மருமகளுக்கு

1953ஆம் ஜனவரி மீ பொங்கல் புது நாளன்று வெளியாகி, முன்னதாகப் பதிவுசெய்த அனைவருக்கும் 14,15 தேதிகளில் அனுப்பப்பட்டுவிட்டது. இன்னும் ஆர்டர் அனுப்பாதவர்கள் எல்லோரும் உடனே தங்கள் தேவைப்படி எழுதுங்கள். ரூ. 3.

ஜகன்மோகினி ப்ரஸ்
திருவல்லிக்கேணி

[தொடர்ச்சி ராப்பர் 3-ம் பக்கம்.]

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.
திருவள்ளுவர்

ஜகன்மோகினி யென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி!
மனத்தைச் சார்ந்து.
- வீரராகவ கவி

மலர் 30 | நந்தன ஞு | பிப்ரவரி
இதழ் 2. | தை மீ | 1953

முன் அத்தியாயங்கள்:

1. ஸிம்காவுடன் செஞ்ஜிக்கு.
2. தெய்வீகக் கோட்டை.
3. சங்கராபரணி நதிக்கரையில்.
4. மன்னனும் மக்களும்.
5. பெயரும் புகழும்.
6. பொறுமையின் எல்லை.
7. விதியின் விளையாட்டு.

APR 1953

சரித்திர ஜோதி

தியாக பலி

வை. மு. ஸ்ரீநிவாஸன், எம். ஏ. பி. எல்.

8. வீராவேசம்.

"பொறுமையின் எல்லையையும் விதியின் விளையாட்டையும் ஓரளவு விளக்கினேன்: அவற்றின் விளைவாக எழுந்த வீராவேசத்தை வர்ணிப்பதில் பெருமிதம் கொள்கிறேன். தேஜஸ்ஸிங்கின் வீர முழக்கமும், மஹமத்கானின் தூய்மையின் சிகரமும் அவ்விருவரிடையே நிலவிய இணைபிரியா நட்பும் இணையிலா ஒற்றுமையும் நினைக்குந்தோறும் எனக்கே வீராவேசத்தை உண்டாக்குகின்றனவே, அப்படியாயின் அவர்களது போர் வீரர்களுக்கு எத்தகைய உணர்ச்சியை உண்டாக்கியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!" என்று தொடர்ந்தார் ஸ்ரீமான் வழிகாட்டி.

சேனைத் தலைவர்களைக்கூட்டி தேஜஸ்ஸிங் செய்த வீரகர்ஜனையைக் கேளுங்கள்:—

"டில்லி பாதுஷா கப்பத்தைத் தள்ளுபடி செய்து பல ஆண்டுகளாயினும், அதை அறிந்தும் அறியாதவன்போல ஆற்காடு நவாபு இதையே சாக்கிட்டுச் சண்டைக்கு வந்துள்ளான். பொறுமையின் தூண்டுதலினலேயே போருக்கு வந்திருக்கிறுன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. மத உணர்ச்சிகளைக் கிளப்பி மக்களிடையே பிளவு உண்டாக்கக் கருதுகிறுன்: இச்சமயம் தாய் நாட்டைக் காக்க செஞ்சி மக்கள் அனைவரும் ஜாதிமதம் பாராது ஒன்றுபட்டு நிற்கவேண்டும். நம் செஞ்சிக்கு வந்திருக்கும் பேராபத்திலிருந்து அதைக் காப்பது நம் அனைவரின் பொறுப்பாகும்.

மானத்தைக் காக்கவேண்டும், அல்லது மரணத்தை மகிழ்வுடன் ஏற்கவேண்டும். போர் நமக்கு வீரவெற்றியையாவது ஆபரணமாக அளிக்கட்டும்; அல்லது வீர ஸ்வர்க்கத்தைப் பரிசாக அளிக்கட்டும்! நாடு, மதம், நாகரீகம், கலை—இவற்றின் பெயரால் வீராவேசத்துடன் எழுந்து இந்தச் சோதனையைச் சமாளியுங்கள். திடசித்தமே நமக்கு வஜ்ர கவசம்!''

போர் வீரர்கள் வெற்றி விருது கூறிக்கொண்டு அணி வகுத்து நின்றனர் என்று கூறவும் வேண்டுமா? மாற்றானுக்கு அடிமைப்பட்டு மானமிழக்க யார்தான் தயாராயிருப்பார்கள்? விரோதியை விரட்ட வீராவேசத்துடன் எழுந்தனர்.

இது நிற்க, நவாபு பாளையம் செஞ்சி நோக்கி வரும் வழியில் தேவனூரைக் கொள்ளையிட முற்பட்டது. சினங்கொண்ட சர்ப்பம் போல சீறியெழுந்த தேஜஸ்ஸிங் துரித நடவடிக்கை எடுக்கலானான். வழுதாவூரில் திருமணம் செய்து கொள்ளச் சென்றிருந்த சேனாதிபதி மஹமத்கானுக்கு அவஸரச் செய்தியனுப்பி நாட்டுக்கு நேரவிருக்கும் அபாயத்தை அறிவுறுத்தினான்.

மணப்பந்தலில் சடங்குகள் அரைகுறையாக நடந்து கொண்டிருந்த சமயம் ராஜதூதன் செய்தியுடன் வந்தான். என்னே ராஜ விசுவாஸம்! என்னே நட்பின் வலிமை! என்னே மதபேதமற்ற உண்மைத் தேசபக்தி! "உயிர்த் தோழனும் ஸேனாதிபதியுமான நான் இத்தருணத்தில் மன்னனைப் பிரிந்திருப்பது தகுமா? செஞ்சிக்குப் பேராபத்து என்ற சொல்லைக் காதால் கேட்ட பிறகும் நான் கலியாண குதூகலத்தில் காலத்தைக் கடத்த முடியுமா? சண்டையில் வெற்றி பெற்றுக் குதூகலமாய்த் திரும்பிய பிறகே இம்மணச் சடங்கை முடிப்பேன். இனி ஒரு கணமும் இங்கு தாமதித்தல் தகாது. என்னை ஒரு பொருளாக்கி, இன்றிருக்கும் நிலைமைக்கு உயர்த்தியுள்ள என் மன்னன் என்ன துயரப்படுகிறானோ! நண்பனுக்கும் நாட்டுக்கும் வெற்றியை நிலைநாட்டிய பிறகுதான் எனது சொந்த விஷயத்திற்குக் கவனத்தைச் செலுத்த முடியும். நவாபை முறியடித்து, அவனது ஆற்காட்டைக் கொள்ளையடித்துப் பழிக்குப் பழிவாங்கி, அவன் மகளைச் சிறைப்பிடித்த பிறகே இங்கு திரும்பி கலியாணத்தை முடிப்பேன். என் அந்தஸ்துக்கும் களங்கம் வரக்கூடாது. வெற்றி, அல்லது வீரமரணம். இதோ கிளம்பினேன். யாரையும், எந்த சகுனத்தையும், சடங்குக் குறைவு நிறைவுகளையும், எதையும் பொருட்படுத்த மாட்டேன்! என் உயிர் செஞ்சியிலிருக்கிறது! தேஜஸ்ஸிங்கினிடமிருக்கிறது!...

இத்தகைய வீராவேசத்துடன் நீலவேணியின் மீதேறி ஒரே பாய்ச்சலாகப் பறந்தான் ஸேனாதிபதி மஹமத்கான், மணக்கோலத்தையும் மாற்றாமல்.

தனது சொந்தக் கரிப்பைப் பெரிதாகப் பாராட்டாமல் நாட்டின் பணியை நாடி வந்த நண்பனை அன்புப்பெருக்கால் அணைத்துக் கொண்டான் மன்னன் தேஜஸ் ஸிங். பரஸ்பரம் சகல விஷயங்களையும் அறிந்து கொண்டு ஆவன செய்ய முற்பட்டனர்.

ராஜனிடம் உத்திரவு பெற்று நீலவேணி நாதன் எதிரியின் பாளையத்துள் வீராவேசத்துடன் புகுந்து த்வம்ஸம் செய்யலானான்: நவாபின் படைகள் நாலா பக்கத்திலும் சிதறியோடலாயின. செஞ்சிப் படையினரின் வீராவேசம் அத்தகையது! ஆனால்!...

183174

வைத்தியம்

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

நான் சிறுவனாக இருந்த பொழுது நம்முடைய தாய் நாட்டில் மேனாட்டு வைத்திய நூல்களும் முறைகளும் இப்பொழுது அடைந்திருக்கும் சிறப்பையும் மக்களுடைய நன் மதிப்பையும் அடையவில்லை. ஆயுர் வேத சித்த வைத்திய நூல்களிலும் முறைகளிலும் பொதுமக்களுக்கு மிகுந்த நம்பிக்கை இருந்து வந்தது. ஆங்கிலம் படித்தவர்கள் மேனாட்டு வைத்திய நிபுணர்களையும் முறைகளையும் கௌரவித்து ஆதரித்தாலும் அவர்கள் கூட நம்முடைய பழமையான வைத்திய நூல்களையும் முறைகளையும் வெறுத்துப் புறக்கணிக்கவில்லை. என்னுடைய தந்தை நோய் கடுமையான நிலையை அடைந்தால் மேனாட்டு வைத்திய நிபுணர்களைக் கூப்பிட வேண்டும் என்றும் நோய்வராமலிருக்கவோ நோய் கடுமையில்லாத காலத்திலோ நோயை இல்லாமலே தீர்த்துக் கொள்ளவோ நம்முடைய பழமையான முறைகள் தான் உயர்ந்தன என்றும் கூறுவதுண்டு.

ஆனால் நான் நடுவயதில் இருந்த பொழுதும் நான் முதுமைப் பருவத்தில் இருக்கும் இப்பொழுதும் எல்லோரும் ஆங்கில வைத்திய நிபுணர்களையும் முறைகளையும் நாடுவதைக்கண்டு எனக்குப் பெரும் வியப்பு. மேனாட்டு நாகரீகங்கள் பண்பாட்டையடைந்து விளங்குவதற்கு முன்பேயே நம்முடைய பாரத நாடு சிறந்த நாகரீகத்தின் நிலையமாக இருந்தது என்ற உண்மை யாவரும் மறுக்கமுடியாது. அத்தகைய ஒப்பற்ற பண்பாடுள்ள பாரத நாட்டில் மக்கள் உயர்ந்த முறையில் பெருத்த ஜனத்தொகையாக நல்ல வைத்திய முறைகள் இல்லாவிட்டால் வாழ்ந்திருக்கக் கூடுமா என்று அவர்கள் நின்று நிதானித்து நினைப்பதில்லை. மேனாட்டு பண்பாடு வாழ்க்கை முறை வைத்திய முறை நடையுடைபாவனை மொழி இவைகளில் மோகங் கொண்ட நம்மவர்களுடைய உள்ளத்தை நாம் பழிக்காமல் இருக்கமுடியாது. இந்நாட்டிலுள்ளவர்களுக்கு நன்மையைட பயக்கும் மூலிகைகளையும் மருந்துகளையும் கடவுள் அளித்திருக்கிறார் என்ற உண்மையை நாம் மறக்கக் கூடாது. யஸ்மின் தேசே ஹியோ ஜாத: தஸ்யதஜ் ஜௌஷதம் ஹிதம் (சரகர்)

இந்தியா விடுதலை அடைந்து பூர்ண சுயராஜ்ய பதவியுடன் சுதந்திர வாழ்க்கையாக வாழ்வது 1947 ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி முதல். மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் காங்கிரஸ் செய்த மகத்தான தியாகத்தாலும் விடாமுயற்சியாலும் இரண்டாவது உலகமகா யுத்தத்தின் போக்காலும் ஆங்கில நாட்டில் சர்ச்சில் ஆட்சி நீங்கி தொழில் கட்சி மந்திரி பதவி ஏற்றுக் கொண்டதாலும் அந்தப் பெரும் பாக்கியம் நமக்குக் கிடைத்தது.

ஆனால் மகாத்மாகாந்தி வைத்திய முறையைப்பற்றியும் ஆரோக்கிய முறையைப் பற்றியும் கூறியிருப்பதை நம்மவர்கள் சிறிதாகிலும் கவனித்துப் பின்பற்றுகிறார்களா? இல்லவே இல்லை.

அவர் மேனாட்டு வைத்தியமுறைகள் விஷயத்திலும் ஆஸ்பத்திரிகள் விஷயத்திலும் நமக்கு வெகு நாளாக ஏற்பட்ட மோகத்தை வெகுகாலம் கண்டித்தே வந்தார், இயற்கை முறையில் நோய்களை

நீக்கி ஆரோக்யத்தை அடையும்படி அவர் போதனை செய்தார். அவர்க்கு இயற்கை வைத்தியத்தில் NATURE—CURE மிகுந்த நம்பிக்கை, அவர் கூறுகிறார்:—

"Modern civilisation has rendered even fresh air some what costly, for, in order to breathe fresh air we have to go out of towns, and this means expense...There can be absolutely no doubt that impure air is the root cause of disease in 99 cases out of 100...Thousands of diseased persons have been cured by mere exposure to the air and to the sunlight".

பின்வருமாறு அவர் மீண்டும் வற்புறுத்துகிறார்.

" Man is not born to eat nor should he live to eat. His true function is to know and serve his Master; but since the body is essential to this service, we have perforce to eat...He who is able to control the palate will easily be able to control the other senses...Since Nature always provides just enough food to feed all created beings, it follows that he who takes to himself more than his normal share of food, is depriving another of his legitimate share...

Many scientists have concluded that man is intended to live, not on meat, not even on all vegetables, but chiefly on roots and fruits...a fruit diet is best for us.

இப்படி உணவின் உண்மையைக் கூறி அவர் உபவாசத்தின் நன்மையையும் வியாயாமத்தின் பெருமையையும் விளக்கிக் கூறுகிறார்!

"I can say from my experience that there is absolutely no need to eat more than twice a day for a man who has passed the period of his youth and whose body has attained its fullest growth.

"Exercise is as much of a vital necessity for man as air, water and food in the sense that no man who does not take exercise regularly can be perfectly healthy.

நம்முடைய உடல் ஐந்து பூதங்களால் செய்யப்பட்டிருப்பதால் அதிலுள்ள குறைகளைத் தீர்த்து உடல் நலச்செல்வத்தை அடைய அந்த ஐந்து பூதங்களையே நாம் சரண் அடைய வேணும். இந்த உயர்ந்த உண்மைகளை வைத்தியர்கள் நாடு முழுவதும் பரப்பவேணும். பொதுமக்கள் அவைகளை அறிந்து அந்த ஒழுக்கத்தில் நிலையாக நின்று "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று உணர்ந்து வாழவேணும். இந்திரியங்களை அதிகமாக அடக்கவுங்கூடாது; அடக்காமல் அவை போகும்வழியே போகவும் விடக்கூடாது. (வாக்படர்.)

ஆகையால் ஆரோக்கியம் என்பது ஆயுர்வேதத்தையோ சித்த வைத்தியத்தையோ யூனானி வைத்தியத்தையோ மேனாட்டு வைத்தியமுறைகளான ALLOPATHY யையோ HOMEOPATHY யையொ பொருத்ததல்ல. மனிதன் விரும்புவது ஆரோக்கியம் அல்லது நோயற்ற வாழ்வு; அது எந்த முறையால் வந்தால்

என்ன ? ஆனாலும் நான் வற்புறுத்திக் கூறவிரும்புவது இந்த வெகு பழமையான நாகரீகம் பொலிவுடன் வளர்ந்த நாட்டில் ஆரோக்கியமுறைகள் நன்றாகக் கண்டு பிடிக்கப்பட்டு நடைமுறையில் இருந்திருக்க வேணும் என்று என்னுடைய கொள்கை.

பதஞ்ஜலி முனிவரால் நம்முடைய உடல் சொல் மனம் இவைகளில் உள்ள குறைகள் நீக்கப்பட்டன என்று நம்மவருடைய திடமான நம்பிக்கை. நம்முடைய நாட்டிலுள்ள ஆயுர்வேத சாஸ்திரமும் ராஜஹட மந்திரலய யோக சாஸ்திரமும் நம்முடைய நாட்டிலுள்ள சிறந்த ஞானரத்தினங்களுமாகும். அவைகளுக்கு நிகரான சாஸ்திரங்கள் உலகத்தில் வேறே எங்கும் இல்லை. அஷ்டாங்க ஹிருதயத்தால் சரீர பலமும் அஷ்டாங்கயோகத்தில் ஞானபலமும் ஏற்பட்டால் நாம் சித்த புருஷர்கள் ஆக முடியுமல்லவா?

மூல ஆசிரியர் — மொழிபெயர்ப்பு

சியா ராம சரண குப்தா — "ஹரிணி"

கதர்க் குல்லாய்

என்னுடைய நண்பன் ராமகுமாரன் மிக்க பிடிவாதக்காரன். ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தால், தன்னுடைய கட்சி ஜயிக்கும்வரை ஓயவேமாட்டான். சில நாட்களாக அவன் செய்யும் தொந்திரவு என்னால் பொறுக்கவே முடியவில்லை. கடைசியில் ஒருநாள் எரிச்சலாக—"சரி! புறப்படு! போகலாம், ஆனால், இன்று ஒருநாள் மட்டும் தான் வரமுடியும். மறுபடியும் வந்து என்னைத் தொந்திரவு செய்யக்கூடாது," என்றேன்.

அதைக்கேட்டதும் ராமகுமாரன் கோஷமிட்டுச் சிரித்தான். "ஓகோ! அப்படியா? சரி! சரி! நாளையிலிருந்து நான் அழைத்துப் போகவேண்டிய அவசியமே ஏற்படாது, அப்பா! மகனே! நீ வந்து என்னைத் தொந்தரவு செய்யாமலிருந்தால் போதாதா?" என்று கொக்கரித்தான். "அடே! நீ பெரிய போக்கிரிடா!" என்று கூறியபடியே அவன் முதுகில் இரண்டு 'ஷொட்டு' வைத்தேன். 'போக்கிரி' என்று பட்டம் கொடுத்துவிட்டால் போதும், என் நண்பனுக்கு ஆனந்தம் உச்சநிலையை அடைந்துவிடும் நான் உடுத்திக்கொண்டு புறப்பட்டேன். ராமகுமாரன் ஆச்சரியத்துடன் என்னை விழித்துப் பார்த்தான்,

"என்னடா! இது? இன்றுகூட இந்த சாக்குத் துணிதானா? சீ! கழட்டிவை. நல்ல ஜோரான "ஸில்க் ஜிப்பா" இல்லையாடா? ஒரு மணி நேரமாவது இதைவிட்டுத் தொலையேன். புண்யம் ஒன்றும் குறைந்து விடாது," என்றான்.

அவன் 'சாக்குத்துணி' என்று குறிப்பிட்டது, என் கதர் உடைகளைத் தான். ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தபோது தான் நான் கதர் கட்ட ஆரம்பித்தேன். முதலில் அதைக்கட்ட ஆரம்பிப்பது மிகச் சுலபமாகத் தோன்றியது. ஆனால் அதைத் தொடர்ந்து செய்வதென்பது மிகவும் கஷ்டமான காரியமென்று

பிறகு தான் தெரிந்தது. அதற்குத்தான் எத்தனைத் தடங்கல்கள், அதற்காக அதைவிட்டு விடவும் முடியவில்லை.

மிக்கக் காரமான பதார்த்தத்தைச் சாப்பிடும்போது கண்களில் ஜலம்கூட வந்துவிடும். ஆனால் அதைச் சாப்பிடாமலும் இருக்கமுடியாது. அதேபோலத்தான் இருந்தது, நான் கதர் கட்டிய அனுபவமும், நான் பதில் பேசவில்லை, புறப்பட்டுவிட்டேன். அவனும் அதற்குமேல் பேசவில்லை.

என் மனதில் ஒரே குழப்பம், "நான் செய்வது சரியா?" என்று என் மனத்திற்குள்ளேயே பலமுறைகேட்டுக்கொண்டேன். "இது என்னுடைய வீழ்ச்சியா," என்று எண்ணமிட்டேன். மனப் போராட்டத்தை மறக்கமுயன்றேன். "என்மேல் தவறு இல்லை. இதற்கு முழுப் பொறுப்பாளி ராமகுமார் தான்" என்று அவன் தலையில் குற்றத்தைச் சுமத்திவிட்டு நிம்மதியாக இருக்க முயன்றேன். ஆனால் என் மனச்சாட்சி என்னை இடித்துக் கொண்டேயிருந்தது. நான் நடந்துக்கொண்டு தானிருந்தேன்.

"அடே! பைத்தியம்! என்னடா? வெறி தலைக்கேறிவிட்டதா? வழிகூட மறந்துபோய்விட்டதா என்ன?" என்று கூச்சலிட்ட நண்பன் குரலைக்கேட்டு நான் திடுக்கிட்டேன். என் எண்ணத் தொடர் விடுபட்டது. திரும்பவேண்டிய இடத்தில் திரும்பாமல் நேரே போய்க்கொண்டிருந்தேன். பிறகு வெட்கத்துடன் அவனைப் பின்தொடர்ந்தேன்.

இருண்ட இரவு, பூர்ணசந்திரனை விழுங்கிய பிறகுகூட தீராத பசியுடன் அலைந்த இரவு, 'முனிசிபாலிடி'யின் அழுமூஞ்சி விளக்குகள், இருண்ட மேல்மூடிக்குள் மினுக்கு மினுக்கென்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டிருந்தன. நக்ஷத்திரங்கள் கூட மேகத் திரையில் மறைந்துக்கொண்டிருந்தன. இதனால் எனக்கு மிகவும் அனுகூலமாகயிருந்தது. என் மானத்தைக்காக்க; மிகவும் உதவியாயிருந்தது.

என் பலஹீனத்தை—ஆம், அதை பலஹீனமென்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது—ஓட்டுவதற்காக நான் சக்தியைச் சேர்க்க முயன்றேன். திடீரென்று என்பின்னால் யாரோ வருவது போன்ற உணர்ச்சி, திரும்பினேன். அச்சிறிய சந்தில் பயங்கரமான அந்தகாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை. மறுபடியும் நடந்தேன். திரும்பவும் அதே உணர்ச்சி. என் இதயம் பறையடித்தது. என் தாயார் - சுவர்க்கவாசியான என் தாயார்—இருள் திரையில் மறைந்து, மறைந்து என்னைப் பின் தொடர்வது போன்ற எண்ணம் தோன்றியது. என் உடல் சிலிர்த்தது.

ராமகுமாரன் மறுபடியும் என் மன ஓட்டத்தைத் தடுத்தான்: "என்னப்பா! என்ன யோசனை? மனக்கோட்டையில் சஞ்சாரமோ?" என்று பரிகசித்தான். நான் ஏதோ உளறினேன். அதை இங்கு எழுதாமலிருப்பதே நல்லது.

நாங்கள் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோம். அங்குதான் ஒவ்வொரு நாளும் மனிதனின், பலஹீன மனிதனின் தனமும், யௌவனமும் அழிந்து நாசமாகிக் கொண்டிருந்தன. கீழ்பாகத்திலுள்ள கடைகள் விடியற் காலத்தின் நக்ஷத்திரங்களைப்போல் ஒளிமங்கியிருந்தன. மேலேயுள்ள கடைகளில் அப்

பொழுது தான் உதயகாலத்தின் விழிப்பும், சுறுசுறுப்பும் காணப் பட்டது. எங்கும் சூரிய மண்டலத்தின் பிரகாசம். சதங்கைகளின் இனிய நாதமும், மனதை மயக்கும் சங்கீத ஒலியும், குடிகாரனின் பிதற்றலும், கலந்து வந்தன. இதனிடையே எழுந்த மங்கையரின் கலகல வென்ற சிரிப்பொலி கருத்தைக் கவர்ந்தது. "இந்த பாப மயமான பயங்கர வழியில் நான் மட்டும் தனிப் பிரயாணியல்ல. வழித்துணைக்குப் பலர் இருக்கின்றனர்." என்று தைர்ய மடைந் தேன்.

"இதோ பார்! இந்தப்படிகளின் வழியாகத்தான் நாம் மேலே செல்லவேண்டும். அங்கேதான் சுவர்க்கமிருக்கிறது, சற்று இரு: எதிர்க் கடையிலிருந்து வெற்றிலை பாக்கு வாங்கி வருகிறேன். ஆம்! புஷ்பம் கூடத்தான், சுபஸ்தானத்திற்கு பத்ரம், புஷ்பம், இல்லாமல் போகக்கூடாது, தெரியுமா?" என்று அசட்டுச் சிரிப் புடன் கூறிய வண்ணம் இருளில் மறைந்தான்.

அவனுடைய போக்கிரிச்சிரிப்பு என்னை என்னமோ செய்தது; என் ரத்தம் கொதித்தது, நான் அசையாமல் பிரமைபிடித்தவன் போல் நின்றுகொண்டிருந்தேன்.

"ஆசாமி புதுசுபோலிருக்கு! முழிக்கிறதைப்பார். ஆந்தை மாதிரி, ஒருவேளை குடித்திருப்பானோ?" என்று கடைக்காரன் கூறுவது கேட்டது. நான் படிகளின் பக்கம் பார்த்தேன். இப் படிகள் என்னை மேலே அழைத்துச் செல்லுமா? அல்லது ஆழங் காணமுடியாத பாதாளத்தில் தள்ளிவிடுமா? என்று யோசனையி லாழ்ந்தேன். பிறகு ஒரு நாளும் அந்தப் பாதாளத்தின் சகதியிலி ருந்துவெளிவரமுடியாமல்போய்விடுமோ! என்று எண்ணியபோது என் உடல் நடுங்கியது. நெற்றி கொதித்தது. தலை கிறு கிறுத் தது. தொப்பியின் கீழே கையைக்கொடுத்து மெதுவாக தலைமயி ரைக் கோதி விட்டுக்கொண்டேன். திடீரென்று காற்று வேக மாக வீசியது. உடனே என் தொப்பி காலடியில் விழுந்தது. நான் திடுக்கிட்டேன். "இது என்ன ஆச்சரியம்! சிவா! சிவா! என்ன அபராதம்!" என்று முணுமுணுத்தது என் வாய். ஆம், என் தொப்பி சாதாரணத் தொப்பியல்ல, எல்லோரும் அணியும் தொப்பியைப் போலல்ல. அதன் சரித்திரமே தனியானது. ஒரு க்ஷணநேரத்தில் என் புத்தியில் எவ்வளவு விஷயங்கள் சுழன்றன. என் மனம் பழய சம்பவங்களில் ஈடுபட்டது.

ஆம், நான் கதர் உடுத்த ஆரம்பித்தபோது என் தாயார் உயிருடனிருந்தாள். அன்றொரு நாள் காந்திஜயந்தி கொண் டாட்டம், சாயங்காலம் வீட்டுக்கு வரும்போது ஒரு 'சர்க்கா' வாங்கிவந்தேன். அதை அம்மாவிடம் கொடுத்து "அம்மா! உன் கையினால் அன்புடன் செய்யப்படும் ஆகாரத்தினால் என் பசி தணிந்து எப்படி சுகமுண்டாகிறதோ, அதேமாதிரி உன்கையினால் நூற்று நெய்யப்பட்ட வஸ்திரத்தினால்தான் என் சரீரத்திற்கும் சுகமுண்டாகும்.

நீ நூல் நூற்றுக்கொடு. நான் அதனால் செய்யப்பட்ட கதர்த் துணிகளைத் தான் இனிமேல் கட்டிக்கொள்ளப் போகிறேன்." என்றேன். அச்சமயம் என் தாயாருடைய முகம் வாஞ்சையினு

லும், சந்தோஷத்தினாலும் நிரம்பியிருந்தது. அந்த மலர்ந்த முக மண்டலம் இன்னமும் என் இதயத்தைவிட்டு அகலவில்லை.

ஆனால் என் துரதிர்ஷ்டம், ஒரே ஒரு "தான்" தான் நெய்து முடிந்தது. அதற்குள் என் தெய்வமாதா உலகத்தின் மாயா பந்தங்களிலிருந்து விடுபட்டு பரமனின் பாதார விந்தத்தையடைந்து விட்டாள். அத்துணியின் விலை மதிப்பிட முடியாதது, வெகு நேரம் யோசித்தேன். கடைசியில் அத்துணியை எல்லாம் தொப்பிகளாகவே செய்துவிட்டேன். அதனால் அவளுடைய ப்ரசாதத்தை, ஆசியை என் தலைமேல் தரித்திருப்பதாக நினைத்தேன். அதனுடைய ஒவ்வொரு நூலிழையிலும் என் தாயாரின் கை ஸ்பரிசத்தின் உணர்ச்சியை நான் அனுபவித்தேன். தொப்பியை அணிந்ததும் என் உடலும், உள்ளமும் உத்சாகத்தினால் பூரித்துவிடும்.

"ஐயோ! இன்று நான் எவ்வளவு கொடிய, இழிவான காரியத்தைச் செய்யத் துணிந்தேன். அதனாலேதான் என் அன்னையின் 'ப்ரசாதம்' தலையிலிருந்து நழுவி காலடியில் விழுந்துவிட்டதோ? இந்த அபராதத்திற்கு மன்னிப்பு உண்டா? பரிகாரம் தான் உண்டா? ஐயோ! அவள் என் காலடியில் விழுந்து கெஞ்சுவது போலத் தோன்றுகிறதே! மறுபடியும் அவளுடைய அனுக்ரகத்தை நான் அடைய முடியுமா?" என்று என்மனம் அலைபாய்ந்தது. "அம்மா! உன்னுடைய துக்கத்தைத் துடைத்துவிடுகிறேன். என்னை மன்னித்துவிடு." என்று உரக்கக் கூவினேன்.

ராமகுமாரன் வெற்றிலை, புஷ்பத்துடன் வந்து "வா! போகலாம்!" என்றான்.

நான் குனிந்து தெப்பியை எடுத்து, அதிலுள்ள புழுதியைத் தட்டித் தலையில் வைத்துக்கொள்ள முயன்றேன். ராமகுமாரனை எதிரே கண்டதும், என் ஆத்திரம் கரைபுரண்டது. சீ! போக்கிரி நாயே! என்னை இங்கே எனடா அழைத்துவந்தாய்? இரு! இரு! உன்னை ஒரு கை பார்த்துக்கொள்ளுகிறேன்: என்று கூச்சலிட்டேன். அவன் காரணம் புரியாமல் பிரமித்து நின்றான். நான் வெறிபிடித்தவனைப்போல ஓட ஆரம்பித்தேன். அந்தத் தெருவைத் தாண்டிய பிறகுதான் நின்று மூச்சுவிட்டேன். நாற்புறமும் இருள் அடர்ந்திருந்தது. ஆகாய வெளியில் ஒரு நக்ஷத்திரம் கூட தென்படவில்லை. ஆனால் எனக்கென்னமோ அழிவில்லாத, ஜோதிமயமான பிரகாசத்தின் நடுவே நிற்பதுபோலிருந்தது, அந்த புனிதமான ஒளியினிடையே சாந்தி நிறைந்த, அம்மாவின் முகம் என்னை வாஞ்சையுடன் பார்ப்பதுபோலிருந்தது. "அம்மா! என்னை மன்னித்துவிடு!" என்று கைகுவித்து வேண்டினேன்.

யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.
டி பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க
இலவசச் சம்பன நிதிக்கே

பூந்தோட்டப் புதுமைகள்

'தோட்டம் போடுவது ஒரு விஞ்ஞானம்' என்கின்றார் விஞ்ஞானி. கலைஞரோ தோட்டக்கலையின் அருமை பெருமைகளைக் கட்டுரைக்கின்றார். ஒருவகைக் கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்கத்திற்கும் கூட ஒரு நல்ல சாதனம் தோட்ட விஞ்ஞானமும் தோட்டக்கலையும் என்கிறார் சன்மார்க்கவாதி.

நிலப்பண்புகளை ஆராய்ந்து, வித்திட்டு விளைவு செய்வோருக்கும் செடிகொடிகளையும் மரங்களையும் வளர்ப்போருக்கும் தோட்டப்பணி விசேஷமாக ஒரு விஞ்ஞானமேயாகும். அழகுக் காதலனோ கனுக் காண்கிறான், பன்னிற மலர்கள் கதிரொளியில் மூழ்கிக் களிப்பதையும், இளங்காற்றிலே களிநடம் புரிவதையும். ரோஜா செந்தாமரை முதலான பூக்களையும், பசுஞ்சுடர்க் கொடிகளையும், கொடி தழுவிய தருக்களையும் காண்கிறான், கனவு லோகத்திலே தெய்விக அழகுகளைக் காண்பதுபோல. அந்தக் கனவுக் காட்சிகளை அரும்பாடு பட்டு ஜட உலகத்திற்குக் கொண்டுவருகிறான் அகவுலகிலிருந்து. இவனுக்குப் பூந்தோட்டமும் ஒருவகைக் கலாசிருஷ்டி.

அப்பர் பண்ணை

தோட்டத்திலே உழவும் உழைப்பும், விதை தூவுவதும் நாற்று நடுவதும், களை பிடுங்குவதும் தண்ணீர் பாய்ச்சுவதும், வேலியிட்டுப் பாதுகாப்பதும் எல்லாம், சாமானியருக்கு நெற்றி வேர்வை நிலத்தில் சொட்ட வயிற்றுக்கு இரை தேடும் ஒரு வழிதான். அப்பர் சுவாமிக்கோ, இந்த உழவும் வித்திடுதலும், களைவாங்குதலும், நீர் பாய்ச்சுதலும, பயிரைக் கண்டு நோக்கி வேலியிட்டுப் பரிபாலிப்பதும், அகவுலகிலே, ஞான உலகிலே, ஒரு பெரிய தோட்டத்தை, ஒரு விவசாய வளர்ப்புப் பண்ணையை நினைப்பூட்டுகிறது.

வயிற்றுக்கு உணவுபோல் உள்ளத்திற்கும் மெய்ஞ்ஞான உணவு தேவையல்லவா? அப்பர் பாடுகிறார்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து,
விருப்பெனும் வித்தை வித்தி,
பொய்ம்மையாம் களையை வாங்கி,
பொறையெனும் நீரைப் பாய்ச்சி,
தம்மையும் நோக்கிக் கண்டு,
தகவெனும் வேலி யிட்டு,
செம்மையுள் நிற்ப ராகில்,
சிவகதி விளையு மன்றே.

உண்மையாக உழைக்கவேண்டுமல்லவா உழவன், நிலத்தைப் பண்படுத்தும்போது? உண்மையாகிய உழவைச் செய்துதான் உள்ளத்தை உள்ளவாறு பண்படுத்த இயலும் என்கிறார் அப்பர் என்ற திருநாவுக்கரசு சுவாமிகள்.

மெய்ம்மையால் பண்பட்ட உள்ளத்திலே நல்விருப்பத்தை விதைத்தால், உழுது விதைத்த தோட்டம்போல உள்ளமும் பசுமை பொலிய, இனிமை தழைக்க நற்பயன் விளைக்குமாம்.

எனினும் பயிருக்குக் களைபோல் பொய்ம்மையும் இடையிடையே தோன்றிவிடுகிறது. ஜாக்ரதையாக, களை தோன்றத்

தோன்ற, அந்தப் பொய்ம்மையைக் களைந்த வண்ணமாயிருக்க வேண்டுமாம்.

இனி, பூந்தோட்டம் வள்ளலைப்போல் தாராளமாக வழங்குகிற தென்றல், அது நம்மை மேன்மேலும் உழைக்கச் செய்து நம் பொறுமையையும் கடுமையாகச் சோதித்துப் பார்க்கிறதல்லவா? அத்தகைய பொறுமை உள்ளுக்குள்ளே ஞானப் பூந்தோட்டம் அமைப்பதற்கும் வேண்டும் என்கிறார் அப்பர்.

அந்தத் தோட்டத்திலே பொறுமையாக நீர் பாய்ச்ச வேண்டு மென்றால், இந்தத் தோட்டத்திலே பொறுமையையே நீராகப் பாய்ச்ச வேண்டுமென்கிறார்.

தோட்டப் பயிர்களை, பூஞ்செடிகளை கனிமரங்களைக் கண்டு கண்டு நோக்கி நோக்கி வேண்டுவன செய்வதுபோல், வேலியிட்டுப் பாதுகாப்பதுபோல், இந்த அகப்பூந்தோட்டத்திலும்,

தம்மையும் நோக்கிக் கண்டு,
தகவெனும் வேலி யிட்டு —

இத்தகைய செம்மையான நெறியில்நிலைபெற வேண்டும் என்கிறார்.

இந்தத் தோட்டத்தின் விளைவு சிவகதி.

சிவகதி விளையு மன்றே

என்கிறார் அருட்கவிஞர். அருள் வழியிலே, தானாகவே விளைவது சிவகதி, அதை நமது சாமர்த்தியத்தால் விளைவிக்க இயலாது, தோட்டப பயிரை விளைவித்து விடுவதுபோல.

எனினும் தோட்டப் பயிருக்கும் பூஞ்செடி கொடிகளுக்கும் பாடுபடுவது போல் பாடுபட்டுத் தானாக வேண்டும். பூந் தோட்டத்திலே உழைப்பை விலையாகக் கொடுத்து ஊதியம் பெற லாம். ஞானப் பூந்தோட்டத்திலோ விலை கொடுத்து சிவகதி வாங்க முடியாது. உழைப்பு இங்கே அர்ப்பணம்தான இறைவனுக்கு, இது எத்தகைய புதுமை பாருங்கள்.

சாதாரணப் பூந்தோட்டங்களிலும் இறையருளுக்குச் சான்றாகப் புதுமைகளைப் பார்க்கிறோம். பூந்தோட்டம் பூஞ்செடிகளின் வளர்ப்புப் பண்ணை மட்டுமா? உழைப்பாளியான தோட்டக்கார னின் ஒழுக்கத்திற்கும் பக்திக்கும் ஒரு வளர்ப்புப் பண்ணை தான்.

பூஞ்செடி கொடிகள் தளிரோடி இலைவீசி அரும்பி மலர்களால் பொலிவது போல், உண்மையான தோட்டக்காரன் (உழைப்பா வில் கேவலம் தோட்ட வேலைக்காரனல்ல; பெயரளவில் தோட்ட முதலாளியல்ல) தனக்குள்ளே தன்னை அறியாமலே ஒழுக்க அம் சங்கள், மனோசக்திகள் இதயப்பண்புகள் மெல்ல மெல்லத் தழைத்து அரும்பி மலரவும் காண்கிறான்.

இயற்கையழகில் இறைவன்

பண்பட்ட உள்ளம் கொண்ட தோட்டக்காரன், தோட்டத் தின் இயற்கையழகுகளிலே அழகுத் தெய்வத்தையும்கண்டு உபா சிக்கிறான்.

தாமரைப் பொய்கையிலே—கதிரொளி
தட்டுமவ் வேளையிலே,
பூமலர்ந் தோங்கிடவே – அரியென்று
போதம் நயப்பேனடி !

என்ற கவிமணியின் பாட்டை நினைப்பூட்டிக் கொள்ளுங்கள். இத்தகைய பக்தி பரவசம் பூஞ்சோலையிலும் அங்குள்ள தாமரைப் பொய்கையிலும் கிடைக்கக் கூடியது தான.

அப்பர் சுவாமிக்கு விவசாயப் பண்ணைகளும் பூஞ்சோலைகளும் உள்ளத்திலே பக்திப்பயிரை ஓங்கி வளரச் செய்திருக்கவேண்டும். பேயாழ்வாரும் தொண்டரடிப் பொடியாழ்வாரும் பெரியாழ்வாரும் தோட்டம் போட்டுப் பக்திப் பயிர்செய்து பேரின்ப விளைவுபெற்றனரென்பது பிரசித்தம்.

களை கிள்ளுதல்

பக்திப் பயிருக்கு முக்கியமான களை செருக்கு. சாதாரணமாகத் தோட்டப் பணியிலேயே இந்தச் செருக்கை மட்டுப் படுத்திக் கொள்ளவும் இயலும். நந்தவனப் பணியில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் தங்கள் ஆணவத்தை அறவே போக்கிக் கொண்டதோடு, பிறர் செருக்கைப் போக்கவும் தோட்டக்கலையைப் பயன்படுத்திக் கொண்டனரென்று கருதலாம்.

திருவல்லிக்கேணியில் நந்தவனத் தொண்டு செய்துகொண்டிருந்த பேயாழ்வார், செருக்குற்றிருந்த திருமழிசைச் சித்தரை அவர் போய்க்கொண்டிருந்த விபரீதப்போக்கிலிருந்து விடுவித்து ஆட்கொள்வதற்காகத் தமது நந்தவனத்திலே தாம் போற்றி வளர்த்திருந்த பூஞ்செடி கொடிகளைத் தலைகீழாக நட்டுக் காட்டியதாய் ஒரு கதை வழங்குகிறதல்லவா?

பிறகு, திருமழிசைச் சித்தர் சித்தம் தெளிந்து தமது செருக்கைக் கிள்ளியெறிந்துவிட்டாராம், பூச்சி அரித்த இலையைப் பூந்தோட்டக்காரன் மெள்ளக் கிள்ளியெறிவதுபோல. அப்பால் சித்தர் பக்தரைப் பணிந்து தாமும் பக்தராகிவிட்டார். இவரே திருமழிசை ஆழ்வார்.

அனுபவ சிகரம்

அத்தகைய புதுமைகளைப் பூந்தோட்டக்காரர்களெல்லாம் செய்யமுடியாது. எனினும், பூஞ்செடிகளில் இலை வீசுவதையும் பூக்கள் அரும்பி மலர்வதையும் நோக்கி நோக்கி இன்புறும் தோட்டக்காரன், **"மலரே! மலரே! என் மனம் மலர மலரும் மலரே!"** என்று பூரித்துப் பரவசமாகக் கூடுமல்லவா?

மலர்கள் சொரியும் குளிர்ந்த இளமணமும், அந்தப் பூமணம் தாங்கி வரும் குளிர்ந்த பூங்காற்றும், அக்காற்றிலே மிதந்து வரும் (பறவைகளின்) கீத நாதங்களும், ஒரளவு பண்பட்ட உள்ளத்தையும் பக்திப் பூந்தோட்டமாக்கக் கூடும்.

அமைதியான மாலை வேளைகளில் பூங்காவனப் புதுமைகள் எதிர்பாராத பக்தியனுபவங்களையும் விளைவிக்கக் கூடும்.

மாசில் வீணையும், மாலை மதியமும்
வீசு தென்றலும், வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!

என்ற அப்பரின் அற்புத அருள்வழி-அனுபவத்தின் சாயை கூடப் பூந்தோட்டத்திலே கிடைக்கக்கூடும், புதுமை புதுமைகளான அனுபவங்களின் சிகரமாக.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்
B. A., L. T., M. L. C.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

193

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஏறத்தாழ 20 வருஷம் நான் ஒரே இடத்தில் இருந்து வேலை பார்ப்பதும் மற்றவர்கள், முக்யமாக வெளியூர்களில் கவர்மெண்டு வேலையிலிருந்தவர்களுக்கு சென்னையில் வந்து வேலை செய்வதற்கு ஒருவாய்ப்புக் கிடைக்காம லிருப்பதும் பலருக்கு ஒருவித பொருமை உண்டு பண்ணியதுடன் ஐஸ்ஹவுஸ் ஆசிரமத்திலும் பிராமணரல்லாத ஒருவர் தலைமை வகித்தால் பிராம்மணரல்லாதாருக்கு அதிக சலுகை ஏற்படும் என்றும் சிலர் நினைத்தபடியால், என்னை வெளியூருக்கு மாற்ரு விட்டாலும் உள்ளூரிலேயே வேறு ஒரு ஹைஸ்கூலுக்கு மாற்றுவது என்று தீர்மானித்து, என் 6 மாதலீவுக்குப பிறகு, ராயப்பேட்டையிலுள்ள கவர்மெண்ட் ஹோபார்ட்டு ஸ்கூல் தலைவியாக மாற்றினார்கள். 1932 ஜனவரி 6-ஆந்தேதி அங்கு சென்று வேலை ஒப்புக்கொண்டேன். நான் ஏற்கனவே ஹிந்துஸ்தானி படித்து (Compulsory Test) ஒரு பரீக்ஷை முடித்திருந்தேன். ஆக இந்த ஸ்கூலில் அந்த பாஷையில் பேச்சுப்பழக்கம் உண்டாவதற்கு எனக்கு வாய்ப்பு ஏற்பட்டது திருப்தியாகவே யிருந்தது. முகம்மதியப் பெண்கள், அநேகம் உபாத்தினிகளும முகம்மதியர்களே. மகம்மதியர் அல்லாத உபாத்தினிகள் மிகச்சிலரே. மிஸ் கோமன், மிஸ் மிச்செல், மிஸஸ் ஸ்வர்ணம்மாள் இவர்கள் முக்கியமானவர்கள், 10 மாட்டு வண்டிகள் கவர்மெண்டு செலவில் தினம் காலையில் 7 மணிக்குப் புறப்பட்டு 4, 5 நடை வண்டிக்கு 8, 10 பேர் வரைக்கும் ஏற்றி அழைத்து வரவேண்டும். மாலையில் 4 மணிக்கு ஆரம்பித்து சுமார் 7 மணிக்குள் எல்லாரையும் திருப்பி அவரவர்கள் வீட்டில் விட்டுவிட வேண்டும். எல்லாரும் கோஷாக்கள், சிலருக்குத்தான் சொந்த வண்டிகள் உண்டு. மற்ற அத்தனை பேருக்கும் கவர்மெண்ட் செலவில் வண்டி யனுப்பும் வழக்கம் ஏற்பட்டிருந்தது. கோஷாவாதலால் தெருவில் பலர் பார்க்கும்படி நடந்துவரக் கூடாது. 10 வயதுக்குட்பட்ட பெண்கள் பலர் சாதாரணமாக அவர்கள் வீட்டு வேலைநிமித்தம் தெருக்களில் போய்வரும் பழக்கமுள்ளவர்கள்கூட பாடசாலைக்கு வருவதற்கு மாத்திரம் ஸ்கூல் வண்டியை எதிர்பார்ப்பார்கள். இந்த வண்டிகள் சரியான வேளைகளில் போய் வருவதை கவனிப்பது ஒரு பெரிய பொறுப்பு: வண்டிக்காரன் ஆண் பிள்ளையல்லவா, ஆக, ஒவ்வொரு வண்டிக்கும் ஒரு வயதான துலுக்க மூதாட்டி (வீடு வீடாக இறங்கி) (சந்துகளில் உள்ள இடங்களில் எல்லாம் வண்டியை விட்டுக் கொண்டு சென்று) அவ்விடத்துப் பெண்களை வண்டியிலேற்றி அழைத்துவர வேண்டும், வண்டியின் இருபுறத்திலும் கோணித்திரை. எப்படியோ ஒவ்வொரு வண்டியிலும் 8, 10 பேர் அடைத்துக் கொண்டு வருவார்கள்.

அநேகம் பேர் பிரதி தினமும் காலையில் குளித்து விட்டே வரமாட்டார்கள். திருவல்லிக்கேணி திருவட்டீசுவரன்பேட்டை முதலிய இடங்களில் சந்துகளில் உள்ள ஏழை துலுக்கர்கள் சிலர் வீடுகளில் குழாயே இராது-சந்துகளிலுள்ள பொதுக் குழாய் களிலிருந்து ஜலம் கொண்டுவர வேண்டும். பெண்கள் கோஷா வாதலால் வீட்டுக்கு வேண்டிய ஜலம் ஆண்கள்தான் கொண்டு வரவேண்டும். வேலைக்காரர்கள் வைத்துக் கொள்ள முடியாத குடும்பங்களில், ஆண்கள், "உனக்கு சமையலுக்கு வேண்டிய தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பதே பெரிய ரோதனையாயிருக் கிறது, இனி உனக்கு குளிக்ககூட தண்ணீர் நான் கொண்டுவர முடியுமா" என்பார்களாம். ஆக அந்த துலுக்கப்பெண்களுக்கு ஸ்நானம் செய்வதிலுள்ள சுகத்தை அனுபவிக்க முடியாதுதான். முகம்மது நபி பிறந்த இடம் அரேபியா. அந்த இடங்களில் ஜலக் கஷ்டம் மிகுதி, வெயிலும் அதிகந்தான், ஆயினும் அன்றன்று உடம்பு குளிப்பதற்கு வேண்டிய தண்ணீர் கிடைப்பது அரிது. ஆகவே அவர்களது வேதமாகிய குரானில் "பிரதி தினம் குளிக்க முடியாவிட்டாலும், அழுக்குப் படிந்துவிடக்கூடிய சரீரத்தின் திறந்த பாகங்களாகிய உன் இரண்டு கைகள், கால்கள், முகம் இரண்டு முறையாவது "நமாஸ்" செய்வதற்குமுன்பு தண்ணீரினால் சுத்தம் செய்து கொள்ளவேண்டியது" என்பது கட்டளை. நிற்க, ஹோபார்ட் ஸ்கூலில் தற்கால வசதிகளுடன் கட்டிய ஸ்நான அறைகள் 8. ஆகவே முதல் வண்டிகளில் வரும் பெண்களை மாற்று உடைகள் எடுத்து வந்து இந்த அறைகளில் சுகமாக உடம்பு மட்டுமாவது குளிப்பதற்கு அனுமதி கொடுத்து குளிக்கும்படி தூண்டினேன். ஆயினும் அதன்பலன் அத்தனை திருப்தியா யில்லை!! துலுக்கர்களுடைய உயர்ந்த உடுப்புக்களில் ஜிகினு வேலைகள் அதிகம். ஆகஅவற்றை அடிக்கடி நனைத்து தண்ணீரில் சுத்தம் செய்யமுடியாது. உடுப்புக்களை பலவித அத்தர் முதலான வாசனைகள் போட்டு வைப்பார்கள்: அலங்காரமான ஆடைகள்.

அவர்களது தெய்வநம்பிக்கையும் மதப்பற்றும் சிலாகிக்கத் தகுந்தது. பிரதி தினமும் 5 வேளை (ஜபம், தியானம்) நமாஸ் செய்ய வேண்டும். என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும், எங்கு இருந்தாலும், ஜபவேளை வந்து விட்டால் உடனே முழங் கால் படியிட்டு உட்கார்ந்து உண்மையான மிகுந்த பக்தி சிரத்தை நம்பிக்கையுடன் 5 நிமிஷ நேரமாவது கண்களை மூடிக்கொண்டு ஜபம் செய்வார்கள். கிறிஸ்தவர்களும் இப்படியே; காலையில் எழுந்தவுடன், இரவில் படுக்குமுன், ஒவ்வொரு தடவையும் சாப்பிடுவதற்குமுன் அவர்கள் கடவுளை தியானிப்பதை வழக்க மாகக் கொண்டிருக்கின்றார்கள். ஹோபார்ட் ஸ்கூலில் பிரதி தினமும் காலை 10-மணிக்கு மாணுக்கிகள் யாவரும் Assembly Hall இல் ஒன்று கூடி 5 நிமிஷம் பிரார்த்தனை செய்வது உறுக்கமா யிருக்கும். பழைய சம்பிரதாயங்களைப் பின்பற்றும் ஆசாரமான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் மேடைகளில் ஏறி பாட்டுப் பாடக்கூடாது, ஆட்டங்கள் நடிப்புகள் இவைகளில் ஈடுபடக் கூடாது, பக்தியுடன் கூடிய பாடல்களை அவற்றுக்கேற்பட்ட ராகங்களில் (நமது சுலோகங்கள் வேத மந்திரங்களைப்போல)

மாத்திரமே பாடலாம். அப்படி பிரார்த்தனை செய்யும்பொது சிறுபெண்கள் முதல் அத்தனை பேரும் கட்டுப்பாடாக புடவை, தாவணி தலைப்பினால் தலையை மூடிக்கொள்ள வேண்டும், கோஷா முறை இருக்கத்தான் வேண்டு மென்பதே பெரும்பாலாருடைய கொள்கை. ஸ்கூலின் உபாத்திமைத் தொழில் வகுப்பு Higher Elementary, secondary இரண்டும் இருந்தது. நான் அங்கு வேலைக்குப்போன வருஷத்திற்கு முந்தின வருஷம்தான ஸெகண் டரி வகுப்பு ஆரம்பித்தனர். ஏன் என்றால் மகமதியப் பெண்க ளுக்குள் S. S. L. C வரைக்கும் படித்து முடித்து ஸெகண்டரி உபாத்திமைத் தொழில் பழகுபவர்கள் அதுவரைக்கும் கிடை யாது. ஆகவே அந்த ஒருவகுப்பில் மாத்திரம் மகமதியரல்லா தவர்கள் சேர்த்துக்கொள்ளும் வழக்கமிருந்தது.

வெளியூர்களிலிருந்து உபாத்திமைப்பயிற்சிக்கு வரும் பெண் களுக்காகவும் மற்ற வகுப்பில் படிப்பவர்களுக்குமாக ஒரு ஹாஸ்டல் அங்கு உண்டு; அதற்கு அப்போது மேட்ரனாக இருந் தவள் தாரா பீ (Tara Bi) என்பவள். அவளுக்கு இங்கிலீஷும் தெரியாது. தமிழும் சுமாராகத்தான் தெரியும். ஹாஸ்டல் கணக்கு வார ஒருமுறை பார்க்கவேண்டும். அவள் கொண்டுவரும் கடை சாமான் பட்டி, கறிகாய் பட்டி எல்லாம் ஹிந்துஸ்தானி பாஷையில் தான் இருக்கும். அவளுடைய சுமாரான தமிழ், என்னுடைய சுமாரான ஹிந்துஸ்தானி இவற்றைக் கொண்டு பெரிய கணக்கு புஸ்தகத்தில் நான் ஹாஸ்டல் கணக்கு எழுதியாக வேண்டும். இதன் மூலம் என்னுடைய ஹிந்துஸ்தானி அறிவும் பேசும் பழக்கமும் அபிவிருத்தி ஆயிற்று.

நான் வேலை ஒப்புக்கொண்ட மறு தினத்திலிருந்து ரம்ஸான் பண்டிகைக்காக 1 மாதம் பாடசாலை மூடப்பட்டது. மறுபடி பிப்ரவரி 11 ஆந்தேதி தான் ஸ்கூல் திறக்கப்பட்டது. ஐஸ்ஹ வுஸை விட்டு 20 வருஷங்களுக்குப்பிறகு என் பெற்றோர்கள் என் சகோதரிகள் அவர்கள் குழந்தைகளுடனும் மயிலையில் எங்கள் கிரகத்தில் வந்து தங்கினது அவர்கள் யாவருக்கும் நிரம்பசந்தோ ஷம். வீட்டிலேயே வந்து தங்கிவிட்டதில் எனக்கு விருப்பமான வேதாந்த நூல்கள் படிக்க அவகாசமும், சாரதாவித்தியாலயத் துக்கு அடிக்கடி போய் கவனிக்கவும் அவகாசம் கிடைத்தது.

ஜனவரி 16 ஆந்தேதி யன்று ஸ்ரீ சாரதா ஐக்கிய சங்கத்தின் 20-வது வருஷக் கொண்டாட்டம் ஸ்ரீமதி லேடி அல்லாடி வெங்கட லக்ஷ்மம்மா அவர்கள் தலைமையில் மிகவும் விமரிசையாக நடந்தது. லஸ் ரோடில் உள்ள "பத்ம விலாச"த்தில் வித்தியாலயம் அபி விருத்தியாகி வந்தது. வயதான பெண்களுக்கு ஒரு ஆயத்த வகுப்பு (Preparatory 8-th Standard) Junior & Senior Higher Elementary உபாத்திமை பயிற்சி வகுப்புக்கள் மூன்றிலும் மொத் தம் 90 பேர் இருந்தனர். வித்தியாலயத்துக்கு இதுஒரு சோதனை யான வருஷம், இதுவரைக்கும் (Government Stipend) கவர் மெண்டார் கொடுத்துவந்த $10\frac{1}{2}$ ரூபாய் உதவி 4 ரூபாயாக குறைக் கப்பட்டு விட்டது. ஒரு பெண்ணின் சாப்பாட்டுச செலவு அந்தக் காலத்தில் சுமார் 8 ரூபாய் ஆகும். மீதி $2\frac{1}{2}$ ரூபாய் அவளுடைய ஸ்கூல் செலவுக்கு சரியாயிருக்கும். திடீரென்று $10\frac{1}{2}$ ரூபாயிலி

ருந்து பாதிக்கும் குறைவாக 4 ரூபாயாக்கிவிட்டதில் மிகுந்த ஏமாற்றமும் சிரமும் உண்டாகிவிட்டது. இந்த 4 ரூபாய்க்கு மேல் கைவிட்டு செலவு செய்யமுடியாத ஏழைப் பெண்களை தனிப் படுத்தி, ஹாஸ்டலிலேயே ஒரு B. செக்ஷன் ஹாஸ்டல் ஏற் படுத்தி, அந்தப் பெண்களே செட்டுங் கட்டுமாக வேளைக்கு 2 பேர் சமையல் செய்யும்படியும் அந்த செக்ஷனை கவனித்து கணக்கு எழுத ஸ்ரீமதிகள் G. K. மீனம்பாள், N. நாகலக்ஷ்மி என்னும் இரண்டு உபாத்தினிகளை நியமித்தோம். காபி, டிபன் கிடையாது. 2 வேளை சாப்பாடு மாத்திரம். இதற்கே 4 ரூ. போதாமல், பலரிட மிருந்து வித்தியாலயத்துக்கு சேகரிக்கும் பணத்திலிருந்து எடுத்து செலவழிக்கப்பட்டது. நல்ல காலமாக இந்த நிலைமை இந்த ஒரு வருஷம் மாத்திரந்தான். பிற்பாடு உதவித் தொகை வழக்கம்போல ஆயிற்று.

மாடல் ஸெக்ஷன்—முதல் வகுப்பிலிருந்து, 3-வது பாரம் வரைக்கும் வகுப்புக்களில் மயிலை முதலான இடங்களிலிருந்து அநேகம் பெண்கள் வந்து படித்தனர். எல்லா பாடசாலைகளிலும போல இங்கும் சாரணச் சிறுமிகள் இயக்கம், சட்டாம் பெண்கள், தேகாப்பியாசம், விளையாட்டுக்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டன. கவர்மெண்ட் Grant உம் கிடைத்தது. பாடசாலைத் தலைவி ஸ்ரீமதி C. சுப்பலக்ஷ்மியும் அவளது உதவி உபாத்தியாயினிகளும் மிகத் திறமையாயும், வித்தியாலய அபிவிருத்தியில் மிகுந்த ஆவல் ஊக் கத்துடனும் வேலை செய்தனர். ஹாஸ்டலில் ஏறத்தாழ 100 பேர் மாணுக்கிகளும் 4 உபாத்தியாயினிகளும் தங்கியிருந்தனர்.

தையல் வகுப்பு ஒன்று பிரத்தியேகமாக நடந்தது. Mrs. Maynard என்பவரும் ஸ்ரீமதி V. சங்கரம்மாளும் இந்த வகுப்பை நடத்தி டெக்னிகல் பரீக்ஷைக்கு பெண்களை அனுப்பினர்.

ஹாஸ்டல் பெண்களின் ஆரோக்கியத்தை கவனித்துக் கொண்டவர்கள் ஸ்ரீமான் டாக்டர் M. ராமசந்திரன் அவர்களும், ஸ்ரீமதி டாக்டர் காந்தாமணி யம்மாளும். எல்லாம் இலவசமாகத் தான்.

வித்தியாலயம் ஆரம்பித்து 5 வருஷங்களுக்குப்பிறகு இந்த வருஷந்தான் முதலாவதாக மார்ச்சுமாதத்தில் பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும் நடந்தது. ஸ்ரீமான் S.V. ராமமூர்த்தி I. C. S. அவர்களும் அவரது தர்ம பத்தினியாரும் தலைமை வகித்தனர். பரிசுகளில் முக்கியமானவை ஸப் ஜட்ஜி ஸ்ரீ. P. ராஜகோபாலா சாரியாரால் அவர் மனைவி பூண்டி செல்லம்மாள் பெயரில் கொடுக் கப்பட்ட "The Popularity Prize" ஒரு தங்கப் பதக்கம். ஹாஸ்ட லிலும் பாடசாலையிலும் எல்லாருக்கும் உதவி செய்துகொண்டு வழி காட்டியாக இருக்கும் ஒரு பெண்ணுக்கு இந்தப் பரிசு. இந்த வருஷம் P. பட்டம்மாள் என்பவளுக்கு இது கிடைத்தது. முதலி யார் ஜாதி: 4 குழந்தைகளுக்குத் தாயாகி 25, 26 வயதில் புருஷனை யிழந்து பிறகு இங்குவந்து சேர்ந்துபடித்து முன்னுக்கு வந்தவள்.

ஸ்ரீமான் V. நடராஜன் அவர்களால் அவரது பெற்றோர்கள் பெயரால் ஏற்படுத்தப்பட்ட "வைத்தி—சிவகாமி" பரிசுகள் மூன்று, டிரெயினிங்கு 3 வகுப்புக்களில் முதல்தேர்ச்சி பெற்றவர் களுக்கு அளிக்கப்பட்டன.

சாரதா ஐக்கிய சங்கத்தில் 15 வருஷங்களுக்கு மேலாகவே (President) தலைவியாயிருந்து காலஞ் சென்ற லேடி மங்களம்மாள் சதாசிவய்யரின் உருவப்படத்தை ஸ்ரீமான் T. R. வெங்கட்ராம சாஸ்திரியார் திறந்து வைத்தார். அவ்வமயம் ஸ்ரீமான் ராவ் பகதூர் M. R. ராமஸ்வாமி சிவன் அவர்கள் அம்மையாருடைய அருமையான குணவிசேஷங்களைப்பற்றி உபந்நியஸித்து தலைவருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனோபசாரம் கூறினர்.

சங்கத்தின் கூட்டம் வாரா வாரம் பிரதி சனிக்கிழமையும் கூடி அதில் நான் பகவத் கீதை உபந்நியாசம் செய்து வந்தேன. ஒரு கீதை கமிட்டி ஏற்படுத்தி கீதை, ஸ்ரீமான் D. S. சர்மாவின் Primer of Hinduism, ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய - Words of the Master இவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாகங்களைப் படித்து, வருஷம் ஒருமுறை பரீக்ஷைவைத்து அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப்பரிசளிப்பது என்று ஏற்படுத்தினேம். அநேகம் மாணுக்கிகள் உபாத்தினிகள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். இதனல் நமது ஹிந்து மதத்தில் பற்றும் பக்தியும் விருத்தியாக வேண்டுமென்பதே "கீதை கமிட்டி"யின் நோக்கம்.

ஐஸ்ஹவுஸ் ஆசிரமத்துக்கு எனக்குப் பிறகு ஸ்ரீமதி கடம்பா அம்மாள் தலைவியாக நியமிக்கப்பட்டாள்.

ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாசய்யங்கார் தலைமையில் லேடி வில்லிங்டன் பாடசாலை பரிசளிப்பு விழா நன்கு நடைபெற்றது.

ஹோபார்ட் பாடசாலை ஹைஸ்கூல் மாணவிகளை மார்ச்சு மாதத்தில் ஒருநாள் ஹார்பருக்கு அழைத்துப்போய் சமுத்திரம், சூரிய அஸ்தமனம், பூர்ண சந்திர உதயம், ஒரு ஸ்டீமர் இவற்றைக்காட்டி வந்தேன். இவற்றையெல்லாம் பார்த்து அறியாத அந்த முஸ்லிம் பெண்கள் அன்று அனுபவித்த ஆனந்தத்தை விவரித்துச் சொல்லவேமுடியாது. வருஷப் பரீக்ஷைகள் யாவும் வழக்கம்போல முடிந்து கோடை விடுமுறை மேமாதம் ஆரம்பத்தில் கிடைத்தது.

பெண்மணிக்கனல்

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L

ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

சரித்திரஜோதி

சரித்திர ஜோதி— 1. ஸ்தலமும் காலமும் 2. அஸ்தி வாரம் 3. கபடநாடகமும் சூழ்ச்சிமேல்சூழ்ச்சியும் 4. இறுதி மொழியும் உறுதிப்பாடும் 5. சிங்கமும் புலியும் 6. வீழ்ச்சியும் மீட்சியும்

"கண்முனே காட்டினுள் பெண்மணிக்கனலை, பெண் சக்தியின் சிறப்பை, குன்ரு உறுதியின் எல்லையை, மனமுண்டானல் மார்க்கமுண்டு என்ற உண்மையை! இந்திய சமஸ்தானங்களுள் பலவிதத்திலும் முன்னணியில் நிற்கும் மேன்மையை இன்று மைசூர் பெற்றிருப்பதற்கு உண்மையான அஸ்திவாரமிட்டவள் மாதாசி லக்ஷ்மி அம்மணியே!"

பாலர் மோகினி

ஆத்திரம்

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

○

க்நஷ்ணன்:—"சாந்தி! ஒரே ஒரு தடவை வாசித்துவிட்டு தருகிறேண்டீ, உடைக்கவே மாட்டேண்டீ. தரமாட்டயா? ஆட்டம் ஆட்டம்.

சாந்தி:—முடியாதுன்னு முடியாதுதான் போடா! அப்பாகிட்டே சொல்லி உதைக்கச் சொல்லுவேன்: மரியாதையா போயிடு.

க்நஷ்ணன்:—தரமாட்டேன்னு தானே சொல்றே, ஆகட்டும்! இன்னிக்கு உன் பிடிலே எடுத்து உடைத்தே வைக்கறேன் வாவா! என்று கத்திக்கொண்டே ஓடினான்.

சாந்தி:—ஆமாம் உடைக்கமாட்டே பின்னே, உடைச்சேன்னு உன் முதுகு எலும்பை உடைச்சுடுவேன் தெரிஞ்சுக்கோ, ஜாக்ரதை என்று கத்தினாள்.

இதற்குள் அவள் சிநேகதி கூப்பிட்டாள். சாந்தி அவளோடு போய் பேசிக்கொண்டு இருந்தாள். ஆனால் உள்ளூர தன் தம்பி பிடிலே என்ன செய்துவிடுவானோ என்று பயம்; சீக்கிரமாய் அவளை அனுப்பிவிட்டு உள்ளே ஓடிவந்தாள்; நினைத்ததுபோலவே பிடில் தந்தியை உடைத்து பிலடைகளை எல்லாம் அச்சுவேறு ஆணிவேறாகச் செய்து தாறுமாறாய்க் கிடந்தது.

சாந்திக்கு ஆத்திரம் உச்சத்தை எட்டிவிட்டது; க்ருஷ்ணன்தான் செய்து இருப்பான் என்று ஊர்ஜிதமாய் தெரிந்தது. கூடத்துப் பக்கம் பத்ரகாளிபோல் ஓடினாள். க்ருஷ்ணன் படித்துக்கொண்டு இருந்தான். அவன் எதிர்பாராதவிதம் தடார் தடார் என்று நாலு உதைகொடுத்தாள். க்ருஷ்ணன் உருட்டி அடித்துக்கொண்டு நாற்காலியிலிருந்து கீழே விழுந்தான். அவ்வளவுதான்: முகவாய்க் கட்டையில் பலமான காயம்பட்டு ரத்தம் பீறிக்கொண்டுவந்தது. ரத்தத்தைப் பார்த்த சாந்தி அலறிவிட்டாள்.

இதற்குள் கூச்சல் கேட்டு எல்லோரும் ஓடிவந்தார்கள்; குழந்தையைத் தள்ளி அடிபடும்படி என்ன நடந்தது? என்று அவர்கள் இறைந்தார்கள். சாந்தி பயந்தவாறு விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தாள்.

இல்லேப்பா; என் பிடிலே வாசிக்க தா என்று கேட்டான். நான் கொடுக்கமாட்டேன் என்று சொன்னேன்; அதற்கு

இன்று கட்டாயம் உன் பிடிலே உடைத்தே வைக்கிறேன் வா என்று கத்திக்கொண்டே ஓடினனப்பா. அதற்குள் என் சினேகதி என்னைக் கூப்பிடவே நான் பிடிலே அப்படியே வைத்துவிட்டு வாசலுக்கு போனேன்; வருவதற்குள் உடைத்து விட்டு ஒன்றும் தெரியாதவள்போல் இங்கு உட்கார்ந்து இருக்கிருனப்பா: அதனுல்தான் அப்பா அடித்தேன்.

அப்பா! அப்பா! நான் நிஜமாய் அவள் பிடிலே பார்க்கவே இல்லேப்பா; யார் உடைத்தாளோ எனக்குத் தெரியாது அப்பா! என்று கிருஷ்ணன் அழுதான்.

அதற்குள் அவன் தாயார் க்ருஷ்ணன் பக்கம் பரிந்துகொண்டு, "அவன் ஒன்றும் பொய் சொல்லமாட்டான். யார் உடைத்தார்களோ." சாந்தியே ஒரு ஆத்திரக் குடுக்கை; தந்தி உடைந்தால் என்ன குழந்தையையே கொன்றுவிட வேண்டுமா என்ன! என்று வையத் துடங்கிவிட்டாள்.

பொறுமை இழந்த அவர்கள் தகப்பனர், சரி, சரி ஹரிச்சந்திரன் போகும் பொழுது உன் மகனைத்தான் வைத்துவிட்டுப் போனுன்: நீ சீக்கிரம் டாக்டர் வீட்டுக்குக் கிளம்பு. பிறகு விசாரணை நடத்தலாம் என்று சொல்ல, டாக்டர் வீட்டுக்குப் போனுர்கள்.

பாவம் சாந்தி அடித்துவிட்டாளே தவிர தம்பிக்கு டாக்டர் என்ன சொல்வாரோ என்று பயம்நடுங்கிக்கொண்டே இருந்தது. வெளியே சென்று இருந்த முனுசாமி 2 வயதுக் குழந்தை ராமுவைத் தூக்கிக்கொண்டு வந்தான். சாந்தி அழுதுக்கொண்டு இருப்பதைப் பார்த்து விஷயத்தைவிசாரித்தான். சாந்தி எல்லாம் எடுத்துச்சொல்லி தன் முட்டாள்தனத்துக்கு அழுதாள்.

முனுசாமி ஒரு அலறு அலறியவாறு, அட ராமா! என்ன அவஸரப்பட்டுட்டேம்மா. பழி ஓர் இடம், பாவம் ஒரு இடமாய் ஆயிட்டுதும்மா; நம்ப ராமுதாம்மா பிடிலே அப்படி செஞ்சுடுத்து; பிடுங்கிவெச்சா, கத்த ஆரம்பிச்சுட்டுது; ஐயாவோடே யாரோ பெரிய மனுஷா பேசிகிட்டு இருக்காங்களேன்னு தூக்கிக்கிட்டு பூட்டேன்; ரவெபோய் வாரத்துக்குள்ளே எவ்வளவு ரகளேம்மா! இருந்தாலும் பொண்ணு பொறந்த உனக்கு கோபம் ஆகாதும்மா; கொயந்தே உசுரு பூட்டுதுன்னு என்னும்மா செய்றது?

சாந்தி:—பாவம் க்ருஷ்ணன் நான்செய்யலேன்னு ரொம்ப அழுதான்டா; பொய் சொல்றுன்னு தான் பிடிச்சுத் தள்ளிட்டேன். அது வினையாய் முடிஞ்சுடுத்து என்று சொல்லி தன் முட்டாள் தனத்தை எண்ணி மீண்டும் துக்கப்பட்டாள்.

இதற்குள் ஆஸ்பத்திரிக்குப் போனவர்கள் வீடுவந்தார்கள்; முனுசாமிக்கோ விஷயத்தைச் சொல்லிவிட வேண்டும் என்று பதைபதைக்கிறது; சாந்தி முனுசாமியின் முகத்தையேபார்க்கி

றாள். அவன் முந்திக்கொண்டு, சாமி பழிவொரு இடம் பாவமொரு இடமாய்விட்டதுங்க. ராமு தானுங்க பிடிலே அப்படி செஞ்சிடுத்து. பாவம் அநியாயமா கொழுந்தே உதைபட்டுதுங்க என்றான்.

சாந்திக்கோ தன்னை என்ன செய்வார்களோ என்ற பயத்தில் குனிந்த தலை நிமிராமல் நின்றுக்கொண்டு இருந்தாள். இதைக்கேட்ட அவள் தாயாருக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்தது.

கேட்டயா சாந்தி! உன் பெயருக்கும் குணத்திற்கும் பொருத்தம் இருக்கிறதா: எத்தனை தடவை உனக்கு ஆத்திரப் படக்கூடாது என்று புத்தி சொல்லி இருக்கிறேன்; போதுமா ஆத்திரத்தால் வந்த அனர்த்தம்; இனியாவது ஆத்திரத்தை விட்டுவிடு; பெண்களுக்குப் பொறுமைதான்பொக்கிஷம் என்று புத்தி சொல்லிக்கொண்டே இருந்தாள்.

சாந்தி ஓடிவந்து தன் தாயின் காலில் விழுந்து "அம்மா அம்மா ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்ற பழமொழி சரியாய்விட்டது. இனி இம்மாதிரி நடக்கவே மாட்டேன்; என்னை மன்னிச்சுடும்மா" என்றாள்.

உடனே தம்பியிடம் போய்,க்ருஷ்ணா! தெரியாது உன்னை அடிச்சுட்டேன்டா, இனி நீ என்ன பண்ணாலும் உன்னை அடிக்கமாட்டேன்டா; என்மேலே கோவிச்சிக்கமாட்டயே என்றாள்.

க்ருஷ்ணன்:—நான் ஏன் அக்கா கோவிச்சிக்கறேன்? இனிமே உனக்குக் கோபம் வரும்படியாவே நான் நடந்துக்க மாட்டேன் என்றான். இதைக்கேட்ட எல்லாரும் க்ருஷ்ணனுடைய சமர்த்தை மெச்சி கொண்டாடினார்கள்.

உடனே அவன் தாயார் சாந்தியைப் பார்த்து,"பார்த்தாயா சாந்தி! என்ன சமத்தாய் பதில் சொன்னான்? வேறு குழந்தைகளாய் இருந்தால் "உன்பேச்சு கா! போ! என்னோடே பேசாதே" என்று சொல்வார்கள். இவன் என்ன அழகாய் பதில் சொன்னான் பார். க்ருஷ்ணன் என்ன இருந்தாலும் புத்திசாலிதான். அவன் பெயருக்கு ஏற்ற சேஷ்டை இருப்பதால் உதைவாங்குகிறான். சரி இனியாவது கோபத்தைஒழித்து உன் பெயருக்கு ஏற்ற குணவதியாய் இரு; ஆத்திரம் எவ்வளவு தூரம் வேலை செய்தது பார்த்தாயா; அதனால்தான் ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என்று பெரியவர்கள் பழமொழி செய்தார்கள்; இனி சமர்த்தாய் இருங்கள்.

ஜகன்மோகினி

வருடச் சந்தா ரூ. 3.

தனிப்பிரதி அணா 4.

மறக்கமுடியாத பெண்மணிகள்

1. ஸரோஜினி தேவி

வஸுமதி ராமஸ்வாமி

ஒரு வாரத்திற்கு முன் என் பெண் பிறந்த நாள் வந்தது. அதைக்கொண்டாட அவள்பள்ளிக்கூடத்துப் பெண்களுக்குத் தின்பண்டங்கள் கொடுக்கச் சென்றேன். என்ன பள்ளிக்கூடம்; சுமார் 300 குழந்தைகள் இருப்பார்கள். உபாத்தியாயர் ஒவ்வொரு குழந்தையாக அழைத்தார். உன் பெயரென்னம்மா என்றேன்.

என் பெயர் ஸரோஜா, எங்கம்மா என்னை ஸரோஜீ என்று கூப்பிடுவாள், எங்கப்பா ஸரோ என்பார். எங்கண்ணா தான் ஸரோவாலு என்று கூப்பிடுவான் என்றாள்.

பிறகு ஒவ்வொரு பெண்ணையும் பெயர் கேட்டேன். முந்நூறு பெண் குழந்தைகள் உள்ள அந்தப் பள்ளிக்கூடத்தில் கிட்டத்தட்ட 80 ஸரோஜாக்களும், ஸரோஜினிகளுமிருந்தனர். எல்லா பெற்றோர்களுக்கும் ஸரோஜா என்ற பெயரில் என்ன மோகம்! இதைச் சொல்ல வேண்டுமா? நம் நாட்டு கவி அரசி சுதந்திரச்சுடர் வங்காளக்குயில் ஸரோர்ஜினி அவர்களால்தான் இந்தப் பெயருக்கு இவ்வளவு மகிமை. தமிழ் நாட்டில் ஸரோஜாக்கள் இல்லாத குடும்பங்களே கிடையாது.

சரோஜினி தேவி ஹைத்ராபாத்தில் 1879-வது வருஷம் பிப்ரவரி மாதம் 13-ம் தேதி பிறந்தார்; அவருடைய தந்தை அகோரநாத சட்டோபாத்யாயா; சிறந்த விஞ்ஞானி.

அந்தக் காலத்திலேயே அவருடைய பெற்றோர்கள் சிறந்த கல்வி அளித்தார்கள். பனிரெண்டு வயதில் மத்ராஸில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறிவிட்டார். 16 வயதில் சீமைக்குச் சென்று King's College-ல் மூன்று வருஷங்கள் படித்தார். ஆனால் அவருடைய ஆரோக்கியம் அவருடன் ஒத்துழைக்கவில்லை. மனோ பலத்தால் ஆரோக்கியத்துடன் போராடி ஓரளவு வெற்றியும் அடைந்தார். பத்தொன்பதாவது வயதில் டாக்டர் நாயுடுவைக்கல்யாணம்செய்துகொண்டார். (எவ்வளவு பெரிய அரசியல் வாதியானாலும் ஐம்பது வயதானாலும் கல்யாணம் என்ற பந்தம் விடாது என்பதை நாம் சமீபத்தில் அறிந்தோமல்லவா?) வாழ்க்கையில் பெரும்பகுதி ஹைத்ராபாதில்தான் கழித்தார்.

அரசியலும், இலக்கியமும் வட துருவமும், தென் துருவமும் போன்றது. ஆனால் தீவிர தேசியவாதியான ஸரோஜினி நாயுடு, அழகான கவிதைகள் புரிவதிலும், கதைகள் எழுதுவதிலும் இணையற்றவர். இது அவருடைய தனிப்பட்ட பெருமை. அவர் பேச்சின் இனிமையால் மக்கள் அவருக்கு வங்காளக் குயில் எனப் பட்டம் கொடுத்திருந்தார்கள். 1920-ல் மாடர்ன் ரெவ்யூவில் அவருடைய அழகான கவிதைகள் பிரசுரமாயின. அவருடைய கவிதைகள் சரளமாகவும் அநாயாஸ

மாகவுமிருக்கும். ஆங்கிலக் கவிதைகளைத் திறன்படக் கையாண்ட மிகச் சிலரில் ஒருவரான எட்மண்ட் கேஸ் என்ற பிரபல விமர்சகர் அவருடைய உற்ற நண்பர். The golden Threshold, The bird of time and The broken wing, என்று மூன்று அழகான புத்தகங்கள் எழுதியிருக்கிறார். ஸரோஜினி நாயுடு அழகை அனுபவித்து ரசிப்பதிலேயே கவி ஆனார்.

சரோஜினி தேவி தீவிர அரசியல் வாதி, ஜாதித் துவேஷம், நிறத்துவேஷம், இவைகளை ஒழித்து நிலை நாட்டுவது அவருடைய முக்கிய நோக்கமாக இருந்தது. அதன் பொருட்டு ஐம்பது வருஷங்கள் பாடுபட்டிருக்கிறார். அவருடைய ஆங்கிலக் கவிதைகளால் இந்தியாவினுடைய உணர்ச்சிகள் பழக்க வழக்கங்கள், மனோபாவங்கள் இவைகளை அந்நிய நாடுகளுக்குத் தெரியப்படுத்தினார்.

தேசீய உணர்ச்சியில் அவருடைய குணாதிசயங்கள் வெளிப்பட்டன. பரிசுத்தமும், கவிதை நிறைந்ததுமான அவருடைய பிரசங்கத்தை கண்கொட்டாமல் வாய்மூடாமல் பிரமித்துகேட்பார்கள். காங்கிரஸில் தலைமை வகித்த இந்திய பிரதிநிதியாகச் சீமைக்குச் சென்ற முதல் பெண் இவர்தான். பெண்கள் உரிமைக்காக மிகவும்பாடுபட்டிருக்கிறார். மகாத்மா காந்தியிடம் மிகவும் அன்பும் பக்தியும் கொண்டவர்.

1920 ல் மாண்டேகு சீர்திருத்த விசாரணை கமிட்டியின் முன் ஸ்ரீமதி ஸரோஜினி தேவியார் ஆண்களுக்கு சரிநிகர்ச் சமானமாக பெண்களுக்கு வாக்குரிமை வேணுமென்று வாதித்தார். பாஞ்சால படுகொலை அக்கிரமங்களை சாங்கோபாங்கமாக எடுத்துப் பிரசங்கித்தார். பிரிட்டிஷ் ஆட்சியின் பயங்கரத்தைச் சுட்டிக் காட்டினார். அவருடைய திறன் படைத்த பேச்சும் சொல்லடுக்குள்ள பிரசங்க மாரியைக் கேட்டதும் கூட்டத்தில் வெட்கம் வெட்கமென ஆரவாரித்தார்கள். இந்திய சர்க்காரைப்பற்றி பிரிட்டிஷ் பொது மக்கள் கொண்டிருந்த உயர்வான அபிப்பிராயம் சிதறுண்டன. எனவே தேவியின் பிரசங்கத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் கவனிக்கவேண்டியதாயிற்று, இந்திய மந்திரி மாண்டெகு இவைகளை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றார்.

சரோஜினிதேவியின் ஆவேசம் அதிகரித்தது, விசாரணை கமிட்டியாரின் விஷயங்களை சரியாகப் படிக்கும்படிக் கேட்டார். தகதகவென்று எரியும் சூரியனைவேணுமானாலும் நீங்கள் மறைக்கலாம் : பாஞ்சாலத்தில் சகோதரிகளுக்கு இழைத்த அநீதியை மறைக்கமுடியாதென ஆரவாரித்தார். மாதர்களுக்கு மரியாதை செய்யும் நாகரீகம் படைத்த மக்களென மார் தட்டிக்கொள்ளும் பிரிட்டிஷ் மக்கள் தலை குனிய வேண்டியதாயிற்று. உண்மையை ஏற்றுக்கொள்ளமுடியாமல் மாண்டெகு தவித்தார். சரோஜினி தேவி லண்டனிலிருந்து திரும்பி

வந்ததும் இந்திய கவர்ண்மென்டிற்குவைஸிராய்க்கு ஒரு கண்டிப்பான கடிதம் எழுதினர்.

பாஞ்சால அநீதிகளுக்குப் பரிகாரம் தேடாதவரை அக்குற்றங்களுக்குப் பொறுப்பான சர்க்கார் அளித்த கெய்சரிஹிந் தங்கமெடலை தான் அணியமுடியாதென்று பதக்கத்தைத் திருப்பி அனுப்பிவிட்டார். பிறகு கோமகனர் இந்தியரின் மன்னிப்பைக் கோரினர். இம்மாதிரி அனேகவீரச்செயல்களைச் செய்திருக்கிறார்.

காங்கிரஸ் தலைவருக்குள் ஸ்ரீமதி சரோஜினி தான் உலகமெங்கும் நிறைய சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். காந்திஜியின் சாத்வீகப் போரையும், இந்தியாவின் மேன்மையையும் தன் வாக்கு சாதுர்யத்தால் பரப்பி இருக்கிறார்.

கடைசி காலத்தில் ஒரு மாகாண கவர்னராக ஆட்சி புரிந்தார். அவருடைய இல்லறம் நல்லறமாக இருந்தது. அவரை இந்திய அரசியல் போராட்டத்திலிருந்து தள்ள எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தார்கள். ஒன்றும் நடைபெறவில்லை. காந்திமகானுடைய பரமானந்த சிஷ்யை. அவர் மறைந்த பொழுது "மகாத்மாவின் உயிரும், எங்கள் உயிரும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாதவை என்னும்படியாக நெருங்கிப் பழகி வந்தோம்; எங்களில் சிலர் உண்மையில் இறந்துவிட்டோம்" என்றார்.

நாடு மறக்கமுடியாத பெண்மணிகளில் சரோஜினி தேவி ஒருவர்.

இசைப் பகுதி

அமலனாதிபிரான்

அமலனாதிபிரான்
அடியார்க்கென்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
விரையார்பொழில்வேங்கடவன்*
நிமலன் நின்மலன்நீதிவானவன்
நீள்மதிளரங்கத்தம்மான்* திருக்
கமலபாதம்வந்து
என்கண்ணினுள்ளனவொக்கின்றதே

கொண்டல்வண்ணனைக்
கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன்*
என்னுள்ளம் கவர்ந்தானை*
அண்டர்கோன் அணியரங்கன்
என்னமுதினைக்
கண்டகண்கள்
மற்றொன்றினைக் காணாவே.

திருப்பாணாழ்வார்

ஏ. ராஜம்மாள்

ராகம்: மோஹனம் — தாளம்: திருபுடை

அமலனாதிபிரான்
கீர்த்தனை

	லகு	த்ரு	த்ரு	லகு	த்ரு	த்ரு
				பல்லவி		
1.	க , ,	ப ர	தா	ஸா ,	த ப	க ரி
	அ . .	ம .	ல .	னா . .	தி .	பிரான்
2.	க , ,	ரி க பா	க ப தா	ப த ஸா ஸா	த ஸ் த ப	க ரி ஸ ரி
	அ . .	ம . . .	ல . . .	னா ... தி	பி ...	ரா ன் .
3.	க , ,	ரி க ப க	க ப த ப	ப தஸ்ரிகரி	ஸ் த ரி ஸ	த ப க ரி
	அ . .	ம ...	ல ...	னா ... தி .	பி ...	ரா . ன்
	க த ப	க ரி	ஸ த	ஸா ; ஸ ரி	கா ரி க	பா க ரி
	அ டி .	யார்க்	கென்	னை . . யாட்	. ப்ப .	டு . த் த .
4.	க , ,	ரி க ப க	க ப த ப	ப த ஸ்ரி கரி	ஸ் த ரி ஸ்	த ப க ரி
	அ . .	ம ...	ல ...	னா ... தி .	பி ...	ரா . ன்
	க ப த ஸ த ப	க ரி	ஸ த	ஸா , ரி ஸா	த பா ,	த ப க ரி
	அ . டி ...	யா ர் க்	கென்	னை . யா ட்	ப்.ப . -	டு . த் த .
	ஷி	ஷி	ஷி	ஷி	ஷி	ஷி
	கபதஸ்ரிஸ்	த ப க ரி	ஸ த	ஸாக்ரிஸ்த்	ரி ஸ் த ப	த ப க ரி ‖ கா..
	அ . டி ...	யா . ர் க்	கெ . ன்	னை யா . ட்	ப்ப ...	டு த் த . ‖ அ.
				அனுபல்லவி		
	பா பா த ப	கா த ப	த ப க ரி	கபககரிஸ	ரி க ரி ரி	ஸ ஸ த த
	வி ம ல ன்	விண்ண .	வ ர்கோன்	விரையார்பொழில்	வேங்க .	ட . வ ன்

ஸ தா ஸ ரி க	ஸரிக . ரி	க ப கா ரி	த த ப ப கா	ப த ஸ த	ஸா ஸா	
நி . . ம . லன்	நி . ன் ம	. . ல ன்	நீ ... தி .	வா . .	ன . வ ன்	
ப த ஸ ரீ க	ரீ க . ஸ்	, ரி த ஸ	க ரி க ஸா ரி	ரி ஸ ரி த	, ஸ ப த	
நீ ள் . ம தி	ள . . ர	. ங் க .	த்த . . ம்மான்	தி . . ரு	... .	
க க ரி ரி ஸ் த	ரி ரி ஸ் ஸ்	த த ப க	ப த ஸா க ப	த ஸ்ா ஸ்	த ப க ரி	கா.
க . ம . ல .	பா த ம்	வந் தென்	கண்ணினுள்	ள ன . ஓக்	கின்றதே	அ

சரணம்

ஸ் , ,	ஸ்ா	தா க ரி	ஸ் ரி ஸ்	தா ரி ஸ்	த ப க ரி	
கொண்	ட ல்	வ ண் .	ண . .	ஊ ...	... .	
ஸ , ,	, ஸ	. த ஸ	ரீ க ரி கா	ப க	ப த	
கோ . .	. வ	ல .	ஞ . ய் வெண்	. .	ஊ .	
1. ஸ்ா ஸ்	, த	ப க	பா ப	, க	ப த	
யுண் ட	. வா	. .	. . ய ன்	. வெண்	: ஊ	
2. ஸ த ப த ஸ த	ப த ஸ த	ஸ த ப க	பா ரி க பா	, க	ப த	
யு ண்	ட ...	வா ...	யன்	. என்	. .	
தா த	, த	ப த	ஸ் த ஸ்	, ஸ்	ஸா	
உள் ளம்	. க	வ ர்	ந்தா . .	. .	ஊ	
ஸ்ா , ஸ்ா ,	த ஸ் ரி ஸ்	, ரி ஸ் த	தா க ரி ரி ஸ்	த த ரி ஸ	ரீ ரீ	
அண் . ட ர்	கோ ...	... ன்	அ . ணி . ய	ரங் . .	க . ன்	
க ப க க ரி	ரி க ரி ரி	, ஸ் தா	ஸ் ரி ஸ் ஸ்ா த	த ஸ் த த	, ப தா	
என்	அ ...	...	மு	தி ...	. . ஊ	
ஸ்ா ரீ க ரி	ஸ் த ரீ	ஸ்ா	பா தா ஸ் த	ப க தா	பா க ரி	கா.
கண் . ட .	. . கண்	கள்	மற்றொன்றி .	ஊ . கா	ஞ . வே .	அ

சுதந்திரப் பறவை

வை.மு.கோ. 107-வது நாவல்

4

அன்பு என்கிற பொருளே ஒப்புயர்வற்ற தனிப்பெருமை பெற்றதாகும். அத்தகைய அன்பு, இன்னாரிடம் இத்தன்மையது என்று பிரிந்து ப்ரகாசிப்பது ஒரு தனித்த சோபையும் சிறப்பும் பெற்றதாகும். மனிதவர்க்கத்திற்குள் தலை சிறந்த அன்பு பெத்த தாயின் இணையிலாத அன்பாகும். எல்லாவற்றிற்கும் மேம்பட்ட அன்பு பகவானிடம் பதியும் பக்தியாகும்.

மேல்குறித்தவைகளில் எத்தகைய முக்யத்வமும் இல்லாத இகபரம் இரண்டிற்கும் விரோதியான வீண்விஷயத்தில் அன்பு பாய்ந்து அதில் மூழ்கியுள்ள தன் மக்களைப் பார்க்கும்போது வள்ளியம்மாளின் இதயம் எப்படித்தான் கொதிக்காது. எவ்விதந்தான் தவிக்காது.

ஏராளமான மக்களைப் பெற்றவர்களுக்குத் தனிச் சிறப்பும், தனி மதிப்பும், அலாதியான செல்வாக்கும் உண்டு என்று ஒரு சாரார் சொல்கிறார்கள். ஏகப்பட்ட மக்களைப் பெற்றுவிட்டதனால் சிறப்புக் குறைந்து கண்ணியமிழந்து தன் மக்களாலே, தன் பேரன் பேத்திகளாலேயே அவமதிக்கப்பட நேருகிறது. அந்தப்பெண் தான் செய்யட்டுமே. இந்தப் பிள்ளைதான் செய்யட்டுமே! என்கிற எண்ணம் உண்டாகி அதன் மூலம் உடன் பிறந்தவர்களுக்குள்ளேயே வித்யாஸ மனப்பான்மை உண்டாகி சில சமயம் சில குடும்பத்தில் அதே விஷயம் விஷம்போன்ற த்வேஷத்தையும் உண்டாக்கித் தன் முன்னறி தெய்வமாகிய தாயைத் திண்டாடச் செய்வதையும் பார்க்கிறோம். இம்மாதிரியொரு விஷயங்களைப் பலவிடங்களில் பார்த்துத் தேறியவர்களுக்கு இது மிகவும் சகஜமாகத் தோன்றலாம். பார்க்காதவர்களுக்குப் புதுமையாகத் தோன்றலாம். அதையே அனுபவிக்கும் பெற்றோர்களுக்கு எப்படித்தானிருக்கும்?

["எங்களுடைய விஷயங்களைத் தான் எழுதிவிட்டீர்களா! ஐயோ! எழுத்திலுள்ளது மிகக் குறைவாயிற்றே! என் அனுபவத்தில்உள்ளது இன்னும் அநேகமிருக்கிறதே. தெரிந்திருந்தால் இவைகளை நானாகவலுவில் சொல்லி எழுதவைத்திருப்பேனே!" என்று பதறி அங்கலாய்ப்பார்கள். இதுபோல் எத்தனையோ பேர்கள் சொல்லியும் இருப்பது ப்ரத்யக்ஷ உண்மை.]

ஏராளமான மக்களைப் பெற்று இதனால் ப்ரம்மாண்ட பதவியில் இருக்கப் போகிறோம்! என்று மனப்பால் குடித்தும் பகல் கனவு கண்டும், எதிர்பார்த்திருந்த வள்ளியம்மாளுக்கு தன் மக்களின் இத்தகையலீலைகளைப் பார்த்ததும் வயிறு குமுறுகிறது, பால்சுரக்கவேண்டிய வயிற்றில் கவலையும், அவ

மானமும் நிறைந்தத் தீ குபீரென்று பிடித்து எரிவதுபோல் தோன்றி வதைக்கின்றது. மக்களுக்குச் சத்ரு மாதா பிதா! என்று தன் பாட்டியும் மாமியாரும் அடிக்கடி சொல்லிய பழமொழியின் உண்மை ஸ்வரூபம் இப்போதுதான் வள்ளியின் உள்ளத்தில் வெகு நன்றாகப் பட்டுத் துடிக்கச் செய்தது. கண்ணாடியில் யார் முகத்தைப் பார்த்தாலும் அது அப்படியே ப்ரதிபலித்துக் காட்டும் சக்தி அதற்கு இருக்கிறதுபோல் குழந்தைகள் பெற்றோர்களாகிய கண்ணாடியில் தம்முகத்தைப் பார்த்தால் அதன் ஸ்வரூபமே தங்கள் வாழ்க்கையிலும் ப்ரதிபலிப்பது போலாகிவிட்டதே: ஆதியில் நாங்கள் உலகத்தவரைப் போலும், நம்முன்னோர்களைப் போலும், ஒரு ஒழுங்கான முறையில் வளர்த்திருந்தால் இப்படித் தான்தோன்றிகளாய்க் கெட்டிருக்குமா! நானும் அவரும் ஆதியில் ஆடிய ஆட்டத்தின் ப்ரதிபிம்பம் இப்போது இன்னும் விபரீதமாகிவிட்டது. பெண்பிள்ளைகளா இத்தகைய விபரீத பயங்கர முறையில் உழல்வது, ஐயோ! இதென்ன அக்ரமம். இனி இந்த முத்திப்போனவியாதியை நிவ்ருத்தி செய்யமுடியுமா! திரிந்துபோன பாலைச் சரியாக்கிவிடமுடியுமா! என்ன செய்வேன்! என்று மனது உடைந்து நொந்துபோய் தம்பித்து நின்றவளுக்குத்தான் நின்ற இடத்திலிருந்து ஒரு அடியும் எடுத்துவைக்கத் தோன்றாமல் ப்ரமித்துப்போனாள்.

தாயின் தவிக்கும் உள்ளத்தின் உணர்ச்சி வேகத்தைக் கண்ட புஷ்பா கண்ணீர்பெருக, அம்மா! போதுமா? கண்காக்ஷி, இனி நான் சொல்வதை நம்புவாயல்லவா! நீ வீணாக இனி கண்ணீரை விட்டு என்னம்மா உபயோகம். வா கீழேபோகலாம். இன்று எப்படியும் பணம் கட்டியாகவேண்டும். இங்கு இவர்களுடைய இரும்பு உள்ளத்தின் பேச்சைக் கேட்டுக்கொண்டும் ம்ருகத்தனமான செய்கையைப் பார்த்துக்கொண்டுமிருந்தால் நமக்குக்காரியம் ஆகி விடுமாம்மா! வா! போகலாம் என்று மெல்லக் கூறி கையைப் பிடித்து இழுத்தாள்.

வள்ளி:—புஷ்பா! என் கையைவிடு. என் மனம் கொதிக்கிறது. நான் இப்போது அவர்கள் எதிரில்போய் என் ஆத்திரம் தீரக் கத்திவிட்டுத்தான் வரப்போகிறேன். என்னிதயம் துடிக்கிறது...

புஷ்:—அம்மா! வேண்டாம்! இந்த சமயம் போகவேண்டாம். நில்லு. சின்னஞ் சிறுமியாகிய நான்போய் அவமானப் பட்டது போதும், நீ மக்களைப் பெற்று வாரிக்கட்டிக்கொள்ளும் இன்பம்போதும்: இந்த சமயம் நீ சற்று ஆத்திரத்தையடக்கிக்கொண்டு கீழே வா, இன்று பரீக்ஷைக்குப் பணம் கட்டுவதற்கான வழியைத் தேடுவதைவிட்டுவிட்டு இத்தவீணர்களின் அவமதிப்புக்கு ஆளாகி ரஸாபாஸம் செய்துக் கண் கலங்கவேண்டாம்...ஆதியில் அத்தை சொல்லியதெல்லாம்

உங்களுக்கு அப்போது அனுகரீகமாய் - அஸல்பட்டிக்காட்டுப் பயித்தியக்காரத்தனமாய்த்தோன்றியது. அப்போது நீயும் அப்பாவும் ஆடிய ஆட்டம், கொடுத்த இடம், இந்த கதிக்கு வந்ததென்று அத்தை என்னிடமே சொல்லி வருத்தப்பட்டிருக்கிருள். அந்த உண்மையை நான் இன்றுதான் தெரிந்து கொண்டேன். அப்போதெல்லாம் இருக்கவேண்டிய நிலைமையை மறந்து நீங்களும் நடந்து மக்களையும் பழக்கியது இப்போது எப்படி இருக்கிறது தெரியுமா! விளக்கை ஏற்றி வைக்கோல் போரில் வைத்தது போலாயிற்று! என்று அத்தை சொல்லுவாளே! சரி!சரி! வா கிழே போவோம்...என்று தடதடவென்று கையைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோனுள்.

படி இறங்கும்போது வள்ளியின் மனத்துடிப்பைக்கண்டு சகிக்காத புஷ்பா, அம்மா! இதற்கே உன் மனம் தாளாது இப்படித் துடிக்கிருயே! இவைகளை எல்லாம் விட இன்னும் பெரிய அதிர்ச்சிகரமான விஷயத்தை நான் கேள்விப்பட்டு அதை உன்னிடம் சொல்ல பயந்து கொண்டிருக்கிறேன், அதைக் கேட்டால் நீ எப்படித்தான் தவிப்பாயோ!...

வள்ளி:—ஐயயோ! இதைவிடப் பெரிய இடிபோன்ற விஷயம் வேறு ஏதம்மா காத்திருக்கிறது. சொல்லித்துலையேன். ஆதியில் உன் அத்தையும் பாட்டியும் சொல்லியதைக் கேட்காமல் நாங்கள் ஆடிய ஆட்டத்தின் விபரீதம் இப்படி முடிந்திருக்கிறது என்பதை இப்போது அறிந்து என்ன உபயோகம்? இனியுள்ள உங்களுடைய வாழ்க்கையாவது செவ்வனே நடக்கும் மார்க்கத்தில் கடவுள் கருணை பாலிக்க வேண்டும். புஷ்பா! விஷயத்தைச் சொல்லம்மா...

புஷ்:—என்னவென்றுநான்சொல்வதம்மா!மூன்ருவது அக்கா வருணுவின் விஷயம்! யாரோ பெரிய கலெக்டர்வேலையிலிருக்கிருனும் ஸையத் உஸேன் என்பவனும்—அவனுக்கும் அக்காவுக்கும் சினேகமாம்: அவனை நாகரீக முறைப்படிரிஜிஸ்தர் விவாகம் செய்துகொள்ளப்போகிருளாம். இந்த வெட்கக் கேட்டை என்னுடைய உபாத்யாயினி என்னை பள்ளிக்கூடத்தில் பலபெண்களுக்கு முன்பு கேட்டாள். அதை தடபுடலாக ஆதரித்துப்பேசியதோடு, தானும் அன்னியஜாதியனுன ஒருவனைத்தான் கலப்புமணம் செய்துகொண்டு சந்தோஷமாயிருப்பதாயும் கலப்புமணத்தை ஆதரிக்கவேண்டியது தான் தற்காலத்தின் கடமைஎன்றும் பெரிய லெக்சர் வேறுசெய்தாள்

என்று புஷ்பா சொல்லி முடிப்பதற்குள், என்ன! என்ன? கலப்பு மணமா? என்றுபெரிய குரலில் கூறினுள். அப்படியே தலை சுற்றுவதுபோலாகி சாய்ந்து விட்டாள். அவளுடைய பரிதாபத்தைக் கண்டு புஷ்பாவின் தளிர் போன்ற உள்ளம் கருகிவிட்டது.

அதே சமயம் புஷ்பாவின் தகப்பனர் தினசரி பத்திரிகை யொன்றைக்கையில் பிடித்துக்கொண்டு கண்களில் தீப்பொரி பறக்க அங்குவந்து...வள்ளி: இதோ இந்தக் கண்ராவியைப் பாரு! எனக்கு ஒன்றும் பேசவே தெரியவில்லே! என்று நாற்காலியில் சாய்ந்தார்.

புஷ்பாவும் வள்ளியும் அவசர அவசரமாகப் பத்திரிகையை வாங்கிப் பார்த்தார்கள். என்ன அக்ரமம், சிறிது முன்புதான் புஷ்பா கூறிய அதே விஷயம் கொட்டை எழுத்தில் "நூதன கலப்பு மணம்" ஸ்ரீமதி வருணுவும் ஸ்ரீமான் ஸையத் உஸேனும் காதல் மணம்புரிந்து கொண்டார்கள். ஸ்ரீமதி வருணு, M. A. பட்டம்பெற்றவர், பாரிஜாதபுரிகல்லூரியில் லெக்சரராக இருப்பவர். ஸ்ரீமான் ஸையத்உஸேன் அதே ஊரில் ஐ. ஸி. எஸ். கலெக்டராக வந்தவர். ஸ்ரீமான் உஸேனுக்கு ஏற்கெனவே அவர்களுடைய ஜாதியில் முறைப்படி விவாகமாகி இரண்டு குழந்தைகளும் இருக்கிறார்கள். வருணுதேவியிடம் காதல் கொண்டு ரிஜிஸ்தர் விவாகத்தைச் செய்துகொண்டு இருவரும் ஆறு மாத லீவில் சீமைக்குநேற்று கப்பலேறினர்கள். கலப்பு மணத்தை ஆதரிக்கும் பலர் துறைமுகத்தில் வந்துமாலேசூட்டி மரியாதை செய்து வாழ்த்துக்கூறி அனுப்பினர்கள். உஸேனின் முதல் மனேவியும் தாயாரும் துறைமுகத்தில் அவர்கள் ஜாதி வழக்கப்படி படுதாவின் உள்ளிருந்து எட்டிப் பார்த்துக் கண்ணீர் வடித்த காக்ஷியைக் கண்டவர்களின் உள்ளம் உருகியது.

இதைப்படித்த வள்ளிக்கு எப்படித்தான் இதயம் துடித்து இருக்கும். தன்னேயேதான் தற்கொலே செய்து கொண்டு இந்த அவமானம் தாளாது உயிரை விட்டு விடலாமா என்கிற அதீத எண்ணம் ஆவேசம்போல் வந்துவிட்டது. ஆனல் புஷ்பாவும் அவளுக்கும் சிறியவர்களான இன்னும் மற்ற குழந்தைகளின் கதியும், என்னவாகும்? தானே தெரிந்து நடுத்தெருவில் விட்டுச்சென்று விட்டால் அவர்களே யார் ஆதரிப்பார்கள்? ஆதியில் அஸ்திவாரமில்லாதக்கட்டிடத்தைக் கட்டியதன் பலன் இப்போது ஆட்டம் கொடுத்து விட்டது. மாமியாரும் நாத்தனரும் படித்துப்படித்துச் சொல்லியதை எல்லாம் கேட்காமல் திரிந்ததன் பயன்......பணத்திமிறினல் அலேந்ததன் பயன், பண்டைய பெருமையை அலக்ஷியம் செய்ததன் பலன், இத்தகைய விதியின் விளேயாட்டில் கொண்டு விட்டது. வேணும் நன்ருகவேணும் .. ஐயோ! இந்த பத்திரிகைச் செய்தியைப் பார்த்ததும் உபசாரத்திற்கு வருவதுபோல் விசாரிக்க வந்துவிடுவார்களே, என்னசெய்வது? அந்த அவமானத்தை எப்படிச் சகிப்பது, சாக்கடைப் புழு கிற்குப் போக்கிடமில்லேயே, என்ற வேதனே இதயத்தைக் கப்பிக்கொண்டு விட்டது. அப்படியே ப்ரமித்துப்போய் பயித்தியம் பிடித்து விட்டவள்போல் உட்கார்ந்து விட்டாள்.

தகப்பனாரின் பரிதாபமும் தாயாரின் தவிப்பும் இளம்சிறுமியான புஷ்பாவின் உள்ளத்தை உருக்கியது.

5

முத்துவுக்கு இந்த அலங்கோலத்தின் விஷயம் எதுவுமே தெரியவில்லையாகையால் ஒரேயடியாய்க் கலங்கிப் போய் விட்டான். புஷ்பாவுக்கும் முத்துவுக்கும் சில நிமிஷங்கள்தான் வித்யாஸம், இருவரும் இரட்டைப் பிறவிகள், ஆனால் பார்ப்பதற்கு புஷ்பா மூத்தவள் போலவும் முத்து இளையவன் போலவும் வளர்ச்சிக்குறைவாகக் காணப்படுவான். முத்துவுக்கு சுபாவத்திலேயே பயம் அதிகம். சிறுவயதில் வியாதியுடன் அனுபவித்து அவன் சோனிபோலவே ஆய்விட்டதால் சில குறும்புக்காரப் பிள்ளைகள் அவனைச் சோனி முத்து, ஊசி முத்து...என்று பரிகஸிப்பார்கள். அதுகூட பொறுக்காமல் கண்ணீர் விட்டுக்கொண்டு புஷ்பாவிடம்தான் ஓடிவந்து அழுவான். புஷ்பா அவனைத் தேற்றிச் சமாதானம் செய்து துஷ்டப் பிள்ளைகளைக் கண்டிப்பாள்.

முத்து பார்ப்பதற்கு பலவீனமான நிலைமையில் இருப்பவனேயன்றி படிப்பில் நல்ல கெட்டிக்காரப்பயல். உபாத்தியாயர் இவனை மெச்சாத நாள் கிடையாது. புஷ்பாவும் இவனும் சேர்ந்தாப்போல் படித்து இருவரும் S. S. L. C-க்குப் படிப்பதால் சேர்ந்தாப்போல் பணம் கட்டவேண்டிய நிலைமையும் உண்டாகிவிட்டது. இன்று கட்டாவிட்டால் நாளைய தினம் அபராதம் கட்டியாவது பணத்தைச் செலுத்திவிட வேணும். இந்த நெருக்கடியான நிலைமையில் உடன்பிறந்தவர்கள் கட்டாயம் உதவிசெய்வார்கள் என்று எண்ணி உறுதியாயிருந்ததற்குப் பெரும் ஏமாற்றமாகிவிட்டதால் இளந்தளிர் போன்ற சிறிய தூய இதயங்கள் துவண்டுபோய் விட்டன.

முத்து புஷ்பாவிடம் வந்து அவளைத் தனியே அழைத்துச் சென்று...புஷ்பா! இன்று நாம் என்ன செய்வது. எப்படிப்பணம் கட்டுவது, அம்மாவின் நிலைமையைப் பார்த்தாலே பயமாயிருக்கிறதே, இப்போது நமக்கு யார் உதவி செய்வார்கள்? என்று அழுதான்.

புஷ்பா:—முத்து! நானும் அதைப்பற்றித்தான் யோசனை செய்துகொண்டே இருக்கிறேன், இதோ பாரு தம்பீ! நீ இனி அப்பாவையோ! அம்மாவையோ கேட்காதே. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலிருக்கும் பாவம்...நாம் பணம் கட்டமுடியவில்லை என்றால் இந்த வருஷம் படித்த படிப்பு வீணாகிவிடும். அதனால் நான் பகவானை நம்பி இரண்டு மூன்று வழிகளில் ப்ரயத்தனப்பட நினைத்திருக்கிறேன். அதில் ஏதாவதொன்றில் கட்டாயம்கைகூடுமேயன்றி கூடாது

போகாது: நீ அழாதே, அம்மாவை ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளு; நான் போய்வருகிறேன்...

முத்:—அக்கா! நான் ஒரு காரியம் சொல்கிறேன், அப்படி செய்யலாமா!...

புஷ்:—என்ன தம்பீ! சொல்லு, சொல்லு.........என்ன காரியம்

முத்:—அக்கா! நீ அப்புறம் என்னை அடிக்கக்கூடாது. அதாவது, பட்டண்ணு இன்னும் தூங்குகிறான்! கதவு திறந்திருக்கிறது. அவனுடைய தங்கச் சங்கிலியும் ரிஸ்டு வாட்சும் மேஜை மீது கழட்டி வைத்திருக்கிறான். அதை நான் மெல்ல கொண்டுவந்துவிடுகிறேன்......

புஷ்பா, இந்த வார்த்தை முடிவதற்குள் பளீரென்று முதுகில் இரண்டறைகள் விட்டுக் கண்களில் தீப்பொரி பறக்க விழித்துப் பார்த்தபடியே: பேஷ்! தம்பீ! ஒவ்வொரு அண்ணன்களின் கதி ஒவ்வொரு தினுசாகிவிட்டது! அக்காவின் கதி தான் அத்புதமாக ப்ரகாசிக்கிறது! மிச்சமுள்ள நீ உன் வீட்டிலேயே உன் அண்ணனிடமே திருடவா துணிந்தாய்! நீ ஏதோ சொல்வதாகக் கூறியபோது நான் என்ன நினைத்தேன் தெரியுமா! நம்முடைய அத்தைக்கும் அப்பாவுக்கும் பகைமை இருந்தபோதிலும் நாம் அங்குசென்று காலில்விழுந்து கெஞ்சிக் கூத்தாடி பணம் கேட்டு வாங்கிவரலாம் என்று சொல்லப்போகிறாயோ என்று நினைத்துச் சந்தோஷப்பட்டேன். இத்தகைய விபரீதபுத்தியா உனக்குத் தோன்றியது? அழுகிறாயே வெக்கங்கெட்டு...முத்து மனிதனைக் கீழே மிதித்து வாழ்க்கையை த்வம்ஸம் செய்துப் பாழாக்கும் சத்ருக்கள் எண்ணங்கள்—ஆசையும், அதன் செய்கைகளுந்தான் என்பது உனக்குத்தெரியாதா! அவைகளுள் மிகமிகச் சண்டாளமானது கொலை, களவு, இவ்விரண்டுந்தான் மனிதனை அதபாதாளத்தில் தள்ளி மிதித்துவிடுகிறது. இதையும் மறந்தாயா! திருக்குறள் படிக்கிறாயே! அதில் பயங்கரமான களவைப்பற்றி எழுதியிருப்பதை நீ இப்படியா மறந்துபோய் அதே காரியத்தை நீயே செய்யத் துணிந்தாய் தம்பீ!

உள்ளத்தாலுள்ள லுந்தீதே பிறன்பொருளை
கள்ளத்தாற் கோள்வே மெனல்.

என்கிற அத்புதமான குறளுக்கு அர்த்தம் சென்றவாரந்தானே வகுப்பில் கேட்டுக் கொண்டு வந்து அதைப்பற்றி என்னிடமே பெருமையாகப் பேசினாய். இதற்குள்ளாகவா அதை மறந்து போய் கன்னம் வைத்து உன்னையே பாழாக்கிக் கொள்ளத் துணிந்தாய். உன்னுடையது என்று தீர்மானித்துள்ள பொருளை வேண்டுமாயின் உன்னிஷ்டப்படி நன்மார்க்கத்தில் நீ செலவிடலாமேயன்றி பிறர் பொருளை மனத்தினால்

நினைத்தாலே அதுவும் மகத்தான பாதகம் என்பது தெரியாதா: உனக்கு உடன் பிறந்த அண்ணனாயினும் சரி, பெற்றவர்களே யானாலும் சரி அவர்கள் உனக்கு வேறுபட்ட அன்னியர்தானே! அவர்களனுமதியுடன் கேட்டு வாங்குவது கள்ளத்தனமன்று, கேட்காதெடுப்பது யார் பொருளாயினும் திருட்டுத்தனத்தில் சேர்ந்ததே யன்றிவேறு விதமாகுமா? முத்து! அழாதே நம்முடைய அண்ணனுடையதுதானே! அதை எடுத்தால் பாவமாகாது என்கிற குறுகிய எண்ணங் கொண்டு நீ துணிந்து சொல்லி விட்டாய். நல்ல வேளையாக முதலில் சொன்னாயே! செய்தே காட்டிவிடாமல், அதுவே போதும்; இதோபாரு... தம்பீ இம்மாதிரி எண்ணத்தை இனி மனத்தில் நினைக்கவே நினைக்காதே!

நாம் இம்முறை பரீக்ஷையில் தேறுவதற்கு கடவுளின் கருணை பரிபூர்ணமாயிருக்குமாயின் கட்டாயம்எப்படியாவது பணம் கிடைக்கும். கவலைப்படாதே! நான் இப்போது அத்தை வீட்டிற்குப்போய் கேட்கத் தீர்மானித்து விட்டேன். நம்ம அத்தைமிகவும் நல்லவள்; அம்மாவும் அப்பாவும் தான் அவர்களிடம் சரியானபடி நடக்காமல் இத்தகைய மனஸ்தாபம் வந்து விட்டது. என்ன விருப்பினும் நம்மிடம் அத்தைக்குப் பாசம் வத்திப்போய் விடாது. பெரிய அண்ணன்களும் அக்காகளும் இருக்கிறமாதிரியும் நடத்தையும் மிகவும் சிறுமியான எனக்கே பிடிக்கவில்லை; பெரியவர்களுக்கு எப்படிப் பிடிக்கும்: அதனால் வேறு மனஸ்தாபத்திற்கு அஸ்திவாரம் அதிகமாகி விட்டது. நான் அத்தையிடம்போய் எப்படியாவது ஒத்தாசை செய்யும்படிகெஞ்சிக்கேட்டு வாங்கிக்கொண்டுவருகிறேன். நான் அங்குபோய் வந்ததையே நீ இப்போது அம்மாவிடம் சொல்லாதே. நான் வந்த பிறகு சமயம் பார்த்து நானேசொல்கிறேன். நான் போய் வருகிறேன். என்னை எங்கே என்று கேட்டால் பள்ளிக்கூட சினேகிதை வீட்டிற்குப் போயிருப்பதாகச் சொல். தெரியுமா' இனி இப்படி அசட்டுத்தனமாக நடக்காதே.

முத்து—அக்கா! நான் தெரியாமல் சொல்லிவிட்டேன். நம்மவீட்டு சொத்துதானே என்று நினைத்தது தப்புதான். புத்திக்கெட்டுப் போயிற்று. இனி இப்படிச்சொல்லவேமாட்டேன். நீயும் இதை அப்பா அம்மாவிடம் சொல்லாதே, நான் சமத்தாய் நடக்கிறேன் என்று கண்ணீர்ப் பெருகக் கெஞ்சினான்.

புஷ்பா அவனை சமாதானம் செய்துவிட்டு ஓரே ஓட்டமாக ஓடினாள். அவளுடைய இதயவேகம்... இதயதாகம்... இவைகளுக்குமேல் கால்கள் பறந்துசென்றது.

"அவமானம்! அவமானம்! சகிக்கமுடியாத அவமானம்! ரங்கநாயகி! இதோ இந்த அனியாயக்கொள்ளையைப் பாரு! வெளியில் தலைகாட்ட முகமில்லை. பத்திரிகைக்காரர்களுக்கும் விஷயத்திற்குப் பஞ்சமில்லை. வம்புக்காரர்களுக்கும் விஷமத்திற்குக் குறைவில்லை. இம்மாதிரி மானங்கெட்டப் பாவிகள் உலகில் இருக்கும் வரையில் அனியாயத்திற்கும் குறைவில்லை" என்று ரங்கநாயகியின் கணவர் கத்தி கர்ஜனை செய்வதைப் பார்த்த உடனே ரங்கநாயகியின் உள்ளம் துடித்துத் தூக்கி வாரிப்போட்டது. அண்ணா வீட்டின் அழகுதான் ஏதாவதிருக்கும் என்பது சடக்கென்று தெரிந்தது. உடனே பத்திரிகையைப் பார்த்தாள். அவளுடைய தேகமே பத்தி எரிவதுபோல் வேதனை உண்டாகிவிட்டது. என்ன அக்ரமம். ஸையத் உசேனும் வருணாவுமா நிற்கிறார்கள். கண்ராவியே! இந்த மானங்கெட்ட மணத்திற்கு மாலையும் கழுத்தும் புகைப்படமும் வேறு வேணுமா! தலையிலெழுத்தே! ஏற்கெனவே என் அண்ணன் வீட்டு அவகேட்டைக் கண்டு பரிகஸித்து என் மண்டையை உருட்டுகிறார்கள். இந்த வெட்கக்கேட்டைக் கண்ட பிறகு இனி எங்கவீட்டில் தண்ணீர்கூட குடிக்கமாட்டார்களே! ஏசிப்பேசி என் மானத்தை உண்டு இல்லை என்று வாங்கிவிடுவார்களே, என்று தனக்குள் குமுறிப்போய் அசையாத கல்லாக நின்று விட்டாள். தன் கணவனின் முகத்தையும் பார்க்க அச்சமாகிவிட்டதால் ஒன்றுமே தெரியாது தடுமாறியவாறு தவித்தாள்.

அவள் கணவனாகிய அப்பாதுரைக்கு வந்துள்ள ஆத்திரம் சாமான்யப் பட்டதல்ல. கண்கள் கோவைப் பழம் போலச் சிவந்துவிட்டது. "மானங்கெட்ட மனிதன் சமூகத்திற்கே அழியாத கறையை வடுவை உண்டாக்கிவிட்டச் சண்டாளன். ஆதியில் உங்கம்மா செத்தபோது கர்மாதி எதற்குப் பண்ணுவது. திதி தெவசம் எதற்குப் பண்ணுவது? போன ஆத்மாதான் ஓடிவந்து தின்னுக் கொழுக்கப் போகிறதாக்கும். இதெல்லாம் வீண் டம்பம். அர்த்தமற்றச் செய்கை ஆதாரமற்றச்சடங்கு, அறிவிலித்தனமானது என்று கூக்குரலிட்டுக் குதித்தானே! அவனுக்குச் சரியான மக்கள் தான் பிறந்திருக்கிறார்கள். எனக்கு இப்போது வரும் ஆத்திரத்தில் உன் அண்ணனிடம் போய் வயிற்றெரிச்சல் தீரக் கத்திவிட்டு வரலாமா என்று தோன்றுகிறது. நாளை நம்மிடம் யார் மதிப்பு வைப்பார்கள். ஐ. ஸி. எஸ். உஸேனை மணந்தாளே அவளுக்கு அத்தையாம்... என்றல்லவா உலகம் பழிக்கும்! இம்மாதிரி மானங்கெட்டு வாழ்வதைவிட ஏரி, குளம், கிணறு, இவைகளில் விழுந்திறக்கலாமே ..என்று திட்டும்போது வயிறுகொதிக்கும் வேகத்தில்,உம் இத்தகையப் பாவிகள் புனிதமான ஏரி, குளம்,

ஒணாறு, இவைகளை என் பாதகமாக்கி நசிக்கச் செய்ய வேண்டும், ஒரு பூகம்பம் வந்து அப்படியே அழுக்கிவிடக் கூடாதா! என் தலைவிதி இம்மாதிரி அசந்தர்ப்பங்களையும் அவலக்ஷணங்களையும் பார்த்துப்பரிதவிக்கும்படி யாயிற்று. முதலில் என்னுயிர் போய்விடக்கூடாதா! என்று மனது திடிக்கிறது...என்று கண்ணீர் விட்டுக் கதறினாள் ரங்கநாயகி. ஆமாம்! அழுகைவேறு வேண்டிக்கிடக்கிறது; இதுவரையில் ஏதோ போனால் போகிறதென்று பேசாமலிருந்தேன்: இனி கட்டோடு உன் அண்ணனின் ஆசையைவிட்டுத் தலைமுழுகிவிடவேணும். எனக்குள்ள ஆத்திரத்தில் என்னதான் பேசுகிறேன். செய்கிறேன் என்றே தெரியவில்லை. சில வருஷங்களுக்கு முன்னே ஒரு கலப்புமணம்நடந்தபோது ஊரே சிரித்தது...வீதியில் சிந்துபாட்டுக்கள் பாடி சந்தி சிரித்ததே. அப்போதே நாம் தலை குனிந்தோம். அந்த அவமானப்புயல் உன்குடும்பத்திற்கே வந்துவிட்டது.

என்று ஆத்திரத்துடன் இரையும்போது எதிர்வீட்டு முதலியார் வேண்டுமென்றே கையில் பத்திரிகையுடன் இங்கு வந்து என்ன, அப்பா துரைமுதலியாரவாள்! விஷயம் பத்திரிகையிலே பறக்குதே. இத்தனை மோசமாகவா ஆய்விட்டது உங்க மைத்துனரின் குடும்பம். சார்! நான் அப்பவே நினைச்சேன். பெரியவங்க துணை இல்லாமே தன்னந்தனியளாய்நல்ல வயஸுவந்த வாட்ட சாட்டமான பெண்ஒரு ஆண்பிள்ளையைப் போல் உத்யோகம்பார்க்கப்போனால் எப்படிஉருப்படும்...நீங்களேசொல்லுங்கஸார்! இதெல்லாம் தெரியாமலா நம்மபெரியவங்க வயது வந்தப் பெண்களை வெளியிலேயே அனுப்பாமே நல்ல கட்டுதிட்டமான முறையிலே வைத்திருந்தாங்க! அப்போதுஇப்படிப்பட்ட அனியாயம் நடந்ததா! இல்லவே இல்லை. இப்பதான் பத்திரிகைக்கு குறைவில்லை. இந்த மாதிரிவிஷயங்களுக்கும் குறைவில்லை,என்ன அவமானம் பாருங்கள்.சேச்சே... எனக்கே மானம் தாங்கவில்லையே, உங்களுக்குஎப்படிஇருக்கும் என்று அக்கரையுடன் பேசினார்.

அப்பா:—எப்படி இருக்குமா! ஈயத்தைக் காச்சி கொட்டினதுபோல இருக்கிறது சார். முன்பெல்லாம் பெண்களுக்கு கல்வி அபாரமாய் வேணும் அதுவேணும் இதுவேணும் என்று முறை இட்டு வீடுவீடாகச் சென்று உங்கள் பெண்ணைப் படிக்க அனுப்புங்கள் என்று ப்ரசாரம் செய்தார்கள்! அதன் பலன் நூத்துக்கு 50 நல்லதாயும் 50 இப்படியாயும் வளர்ந்து விட்டது. என்னைக்கேட்டால், வீடுவீடாகச் சென்று ''இனி உங்கள் பெண்களைப்படிக்க அனுப்பவேண்டாம்;அப்படி அனுப்பினாலும் தக்க முறையில் சரியான பாதுகாப்புடன் அனுப்பி அறிவை வளரச் செய்யுங்கள். ஆற்றலை வ்ருத்தியாக்குங்கள்.

ஆடவர்களைப்போல் அரட்டலாகச் செய்து விடாதீர்கள்'' என்று ப்ரசாரம் செய்யலாம் போல் தோன்றுகிறது. அத்தனை கோபம் துடிக்கிறது ஸார்! என்றார்.

வந்தவர்:—ஸார்! நீங்கள் கவலையோ! கஷ்டமோ பட்டு ப்ரசாரம் செய்யவே வேண்டாம். இந்தமாதிரி காலம் வெகு சீக்கிரம் வந்துவிடும். எப்படித்தெரியும்என்று கேட்கிறீர்களா! நாம் நம் கண்ணாலேயே ஒவ்வொரு விஷயத்திலும் நாகரீகம் புகுந்து அட்டகாஸம் செய்ததையும் சிலவருஷங்களுக்குள்ளேயே அதுமாறிப்போய்ப்புளித்துப்போய் பழமைக்கே புதுமையில் பெயரிட்டுத்திரும்பிவருவதையும்நாம்பார்க்கவில்லையா! முப்பாகம் கரைப்புடவை என்மனைவிகாலத்தில் ப்ரமாதமான மதிப்புடன் தாண்டவமாடியது; உடனே மறைந்து பலவிதமான சின்னபின்ன சிதறலுடன் உலாவியது.மறுபடியும்பெரிய கரைவந்துவிட்டது நான் ஜவுளிக்கடை சொந்தக் காரனுகையால் அதைப்பற்றிப்பேசுகிறேன் இப்படித்தான் சகலமும். கல்யாணவிஷயங்கூட பழயபடி சிறு வயதுக் கல்யாணம் வந்துவிடுமய்யா வந்துவிடும்! என்றார். அதே சமயம் புஷ்பா பாவம் முகத்தில் தெம்பேஇல்லாமல் குன்றிப்போய் மகத்தான எதிர்பார்ப்புடன் மெல்லவாசற்படி யருகில் வந்தாள்.

அப்பா:—ஸார்: எனக்குள்ள அவமானத்தில் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் போலிருக்கிறது. அந்தப் படுபாவி மனுஷ்பனுக்கு வெக்கமில்லாமல் இன்னும் கிழே உள்ள பெண் கட்டைகளை கை கால்களைக் கட்டி வீட்டிற்குள் போட்டு அடைக்காமல் படிக்க வைக்கிறானும், படிக்க! மூத்த பெண்களை படிக்க வைத்து வாரிக்கட்டிக் கொண்டாயிற்று, புத்திகெட்ட மடையன், இத்தனை தூரம் அவமானப்பட்ட பிறகுகூட அவனுக்குக் கொழுப்பு அடங்கி இருக்குமா என்ன? ஆதியில் இவன் ஆடிய ஆட்டத்திற்குப் பலன் சரியானபடி கிடைத்து விட்டது. சனியன் பிடித்தக் குடும்பத்தை எனக்கு உறவு என்று சொல்லிக் கொள்ளக்கூட வெட்கமாயிருக்கிறது. இனி அந்தக் கூட்டத்திற்கே தலைமுழுகி விட்டேன். அவர்களைக் கண்டாலே காரி உமிழ்ந்துக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுவேன். இனி அந்த மனிதர்களைப் பற்றிய பேச்சே எடுக்கக் கூடாது என்று என்மனைவிக்கு திட்டம் செய்து விட்டேன்: அந்த நாய்களை உறவு என்று சொல்லிக் கொள்ளப் போவதில்லை. என்மனைவிக்கு மட்டும் மருந்துபோலஒரே ஒரு அண்ணன் என்கிற நப்பாசை இதுவரை இருந்தது. இந்த நிமிஷத்துடன் அதை வெட்டி எறிந்து விட்டேன். இனிமேல் அவர்களுடைய பேச்சை எடுத்தாலும் சரி! யாரையாவது பார்த்துப் பேசினாலும் சரி! கொன்று விடுவேன் என்று திட்டமாகக் கூறிவிட்டேன். விட்டதுடா உன்னுசை விளாம்பழத்து ஓட்டோட...என்பதுபோல் விட்டு விட்டது!

என்று தன்னிலைமைக்கு மீறிய கோபத்துடன் கூறுவதை வாசற்கதவருகிலேயே நின்று கேட்டுக் கொண்டிருந்த புஷ்பாவின் மண்டைமீது ஓங்கி ஒரு அறை அறைந்துத் தள்ளுவது போன்ற அதிர்ச்சி உண்டாகி விட்டதால் அந்தக் கதவைப் பிடித்துக் கொண்டு அப்படியே சாய்ந்து விட்டாள். அவள் அபாரமான ஆசையுடன் எதிர்பார்த்து வந்த மனக் கோட்டையின் அஸ்திவாரம் ஆட்டங் கொடுத்து விட்டது போன்ற வேதனை உண்டாகி விட்டது.

இந்த சமயம் நாம் உள்ளே சென்றால் மாமாவுக்கு இப்போதுள்ள கோபத்தில் சரியானபடி உதைகூட கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. நான் ஒன்று எண்ணி வந்தால் விதி வேறொன்றாக மாற்றி விட்டதே, என்னசெய்வது என்ற தாங்கமாட்டாத விசனத்துடன் தலைகுனிந்தபடியே வீட்டை நோக்கி நடக்கவாரம்பித்தாள். உடன்பிறந்த சகோதரி என்கிற விஷப்பாம்பின் கொடிய செய்கை எத்தனை தூரம் பரவி குடும்பத்தின் கண்ணியமாகிய ஆணிவேரையே ஆட்டி விட்டது. மாமா சொல்வதில் தவறு என்ன இருக்கிறது. பெண் பிள்ளைகள் பெரிய படிப்புகளைப் படித்துவிட்டு பிரமாதமாய்ச்சம்பாதித்துக்குடும்பத்தைத் தாங்கி ஆதரிக்கப் போகிறார்கள் என்று அதீதமான ஆசைவைத்து எதிர்பார்த்த பெற்றோர்கள் வாரிக்கட்டிக்கொண்ட பெருமை என்னவாயிற்று. இத்தனை மக்களைப் பெற்று ஆணுக்குச் சரியாக அதிகார தோரணையில் வளர்த்து பெண்மைக் குணங்களைக் குழிதோண்டிப் புதைத்து விட்டது தான் கண்ட பலனாயிற்று! மாமா சொல்வதுபோல் நானும் மற்றவர்களும் படித்து எந்த கோட்டையைப் பிடிக்கப்போகிறோம். இதனால் செலவுகளும் அவமானமும் குடும்பத்தில் கஷ்டமும் தான் மிச்சமாகும். கட்டாயம் இதற்கோர் விடுதலையும் பரிகாரமும் தேடிப் பெற்றோர்களின் மனப் புயலுக்கு ஒரு அமைதியும் சாந்தியும் கொடுத்துத் தேற்றுவதற்கு நானாவது கடமைப்பட்டு உழைக்க வேண்டும். என்னிதயமே வெடித்து விடும் போலிருக்கிறதே. என் தாயின் உள்ளம் எப்படித் தானிருக்காது? ஏற்கெனவே பலவீனப்பட்ட உள்ளம் ஒருவேளை இந்த அதிர்ச்சியினால் நின்று விடுமோ? நானும் சமயத்திற்குப் பக்கத்திலிருக்காமல் வந்துவிட்டேனே.... என்ற அடங்காத துக்கமும் ஆத்திரமும் தூண்ட விதி என்பதையும் மறந்து ஓட்டமாகவே ஓட வாரம்பித்தாள். சிறுபெண்ணாயினும் அவள் உள்ளத்தில் உண்டாகிக் கொந்தளிக்கும் உணர்ச்சியின் வெள்ளம் கட்டறுத்துக் கரை புரண்டது என்றால் மிகையாகாது.

ஆவணக் காப்பக

மணி ஒன்பதே முக்காலாகிவிட்டது. இவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் போவதற்கு மூன்றுமைல் தூரமிருப்பதால் காசு கிடைத்தவன்று ட்ராமில் செல்வதும் மற்றபோது நடந்துசெல்வதும் வழக்கம். ஆதலால் முத்துவுக்கு நிமிடத்திற்கு நிமிடம் மணியைப் பார்த்து மனத்தில் திகிலும் கவலையும் ஏறிவிட்டது. புஷ்பா சென்றவள் இன்னும் வரவில்லையே, பள்ளிக்கூடத்திற்கே நாழிகையாகிவிட்டால் என்னசெய்வது? பணங்கட்டுவதற்கு வழியில்லாமல் போவதுடன் இன்றுபோகாமலும் இருக்கும்படியாகிவிட்டால் என்ன செய்வது, என்று தவித்தவாறு வாசலிலேயே நிற்கிறான்.

எப்படியும் புஷ்பா சென்றிருக்கும் காரியத்தில் வெற்றியுடன் தான் வருவாள், என்கிற சிறிது நம்பிக்கையும் கூடவே ஊஞ்சலாடுவதால் புஷ்பாவின் வரவுக்கே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது உள்ளே இருந்து இவனுடைய அண்ணன் எழூந்து பெரிய சிகரேட்டைப் புகைத்தவாறு வாசலுக்கு வந்தான். முத்து வீதியில் பார்த்தபடி நிற்கையில் பின்னாலிருந்து ஒரு கும்மாவிட்டபடி, ஏய் கழூதை! யாரெடா பாத்துக்கிட்டு நிக்கரே! வீட்டுலே இன்னிக்கு என்னடா எழவுபொரந்திடுச்சி. அடுப்புலே பூனெகுட்டி தூங்குது! தூங்கிஎழூந்து வரவனுக்கு இத்தினிகாப்பியே காணலே! அம்மா ஒரு புரம் அயுதுகிட்டு படுத்திருக்கிறாங்க, அப்பா என்னமோ குடிமுழுகிப்போயிட்டதுபோல ஒக்காந்திக்கிட்டிருக்கிறாரு. நீ, எந்த கோட்டையைப் பிடிக்கரத்துக்கோ வாசல்லே வயிபாக்கரே? என்னடா இது நாடகம்? அந்தத் தடிக் கழூதை புஷ்பா எங்கேடா! எனக்குக் காப்பி எங்கேடா! என்று கத்தினான்.

ஏற்கெனவே பயந்த சுபாவத்துடனிருக்கும் முத்துவுக்கு இந்த வார்த்தை தாங்காமல் பயமும் துக்கமும் ஒன்றாகச் சேர்ந்து அழத்தான் வைத்ததேயன்றி பதில் பேசும் தைரியத்தையோ! சக்தியையோ கொடுக்கவில்லை.

அதேசமயம் இவனுடைய சினேகிதன் கையில் பத்திரிகையுடன் வந்து, ஹல்லோ! மிஸ்டர்! பாலு! வெரி வெரி குட் நியூஸைப் பார்த்து சந்தோஷத்தைத் தெரிவிக்கவே வந்தேன். என்றான். அந்த தூங்கு மூஞ்சி இப்போதுதான் எழூந்துவருவதால் ஒரு விஷயமும் தெரியாது விழித்தவாறு குட்ந்யூஸா! என்னப்பா! என்ன சொல்லு. பீகம் ஏதாவது சொல்லியனுப்பினானா; என்று விழித்தவாறு கேட்டான்.

இஸ்மேல்!—அட! நீ ஒரு முட்டாள். பீகம் என்னிடம் இனி சொல்லியனுப்ப என்னப்பா இருக்குது. இதோ ஒங்க மூணாஞ் சகோதரி வருணா உனக்கு இனி பயப்படாதவாறு வழி காட்டி விட்டாங்களே! இதோ புகைப்படமும் விஷயமும்பாரு

இதைக் காட்டி உனக்குச் சந்தோஷம் தெரிவிச்சுவரச் சொல்லி பீகம்தான் பத்திரிகையைக் கொடுத்தனுப்பிச்சுது. இனுமே நீ தாராளமா நிக்காசெய்து கொள்ளலாமில்லையா! என்றுகூறி பத்திரிகையைக் காட்டினான்.

பாலு பத்திரிகையை வாங்கிப்பார்த்த ஸந்தோஷத்தில் ஒருதுள்ளு துள்ளினான். அடே டே டே! ரொம்ப சந்தோஷம்பா! வெரி குட்ந்யூஸ் கொண்டு வந்த உனக்கல்ல நான் த்யாங்க் பண்ணணும், இனிமேல்! எங்க வூடு ஏதோ எழவு வூடுமாதிரி இருக்கரத்துக்கு காரணம் இப்பதெரிஞ்சு போச்சு. எது எக்கேடு கெட்டு எப்படியாவது போகட்டும். நான் இன்னும் காப்பிகூட குடிக்கல்லே, ரெண்டுபேரும் சேர்ந்து தர்பார் ஹோட்டலுக்குப் போகலாம் வா! இனி எனக்கு ஒருவிதமான கவலையுமில்லே, இப்பவே அக்காவுக்கு சந்தோஷத் தந்தி கொடுத்துட்டு என் நிக்காவையும் அவங்க வூட்டுலேயே செய்யும்படிக்கு ஏற்பாடு செஞ்சூடும்படி கடிதமும் எழுதிவிடுகிறேன். என்றுகூறிக் கொண்டே ஓரே கும்மாளத்துடன் போய்விட்டான்.

பாவம் முதுகில் ஒருகும்மாவையும் வாங்கிக்கொண்டு நிற்கும் முத்துவுக்கு இந்த விஷயங்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி வூத்துவதுபோல் சுரீரென்று பாய்ந்தது. ஐயயோ! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாகி விட்டதே! அக்காதான் ஒருத்தி இம்மாதிரி ஆகிவிட்டாள் என்றால் அண்ணனுமா. இம்மாதிரி பயங்கரச் சுழலில் சிக்கி இருக்கிறான்! இது அம்மாவுக்குத் தெரிந்தால் அம்மாவின் உயிரே போய் விடுமே! என்ன செய்வது? புஷ்பாவும் எதனாலோ இன்னும் வரவில்லையே! இந்த விபரீதச் சூழ்ச்சியை எப்படி நான் அம்மாவிடம் சொல்வேன். அப்பாவிடந்தான் எங்ஙனம் தெரிவிப்பேன். என்று வருந்தியவாறு நிற்கையில் கண்ணீர்ப் பெருக முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு புஷ்பா வந்தாள்.

அவளைப்பார்க்கும்போதே ஜெயப்ரதமான காரியம்நடக்க வில்லை என்று முத்துவுக்குத் தெரிந்து விட்டது; இங்கும் ஏமாற்றந்தானா! அத்தை என்ன சொன்னாள்? என்று தழதழத்தகுரலில் பயந்தவாறு கேட்டான் முத்து. கண்ணீர்ப் பெருக புஷ்பா, அத்தை சொல்வதற்கு முன்பு அக்காவின்...... அக்காவாம்! அக்கா! துரோகி என்றுதான் இனி சொல்லவேண்டும்' இந்தப் படுபாவியின் சொத்தைப்புராணம் பத்திரிகையின் மூலம் தம்பட்டையடித்து எல்லோருடைய இதயங்களையும் கொதிக்கச்செய்துவிட்டது தம்பீ! மாமாவும் அவருடைய சிநேகிதரும் பத்திரிகையை வைத்துக்கொண்டுதாறுமாறாகத் திட்டுகிறார்கள்; நம்மைக் கொன்றுவிடுவார்கள் போல் ஆத்திர

மும் அவமானமும் கொண்டுபேசுவதை என் காதால் கேட்ட பிறகு எப்படி தம்பீ உள்ளேபோவது? எனக்கே...உலக மறியா சிறுமியாகிய என்னுள்ளமே இந்த பாடுபடும்போது அவர் களுடைய மனக்கொதிப்பின் வேகத்தைக் கூறமுடியுமா! இனி நம்முடைய பேச்சைக்கூட அத்தை எடுக்கக்கூடாதாம்: அண் ணன் செத்துவிட்டான் என்று இருக்கவேண்டும் என்றெல்லாம் அத்தையை மாமாதிட்டுவதைக் காதால் கேட்டு நடுங்கினேன். நம்முடைய குடும்பத்தினால் உண்டாகிய அவமானம் தலைகுனிவு போதும்; இன்னும் நான் வேறு சென்றகாரணத்தினால் அத் தைக்கு ஏதாவது ஆபத்தாக முடியவேண்டாம் என்ற எண்ணத்துடன் திரும்பிவந்துவிட்டேன்...தம்பீ! எதற்கும் பாலு அண்ணாவை எழுப்பி அவன் காலைப் பிடித்துக்கொண்டு நான் கேட்டுப்பார்க்கிறேன் வா என்று முடிப்பதற்குள்முத்து அவளைத் தடுத்து நிறுத்தி, அக்கா! பெருமாள் பெரிய பெரு மாளான கதையை வாத்தியார் வகுப்பில் அடிக்கடி சொல்வார் பார்த்தாயா! அதுபோல் தான் நம்ம குடும்பத்தில் பாலு கதியும் ஆய்விட்டது. இந்தப் பத்திரிகை அலங்கோலத்தை ஒரு சாயபு கொண்டுவந்து காட்டி சந்தோஷமாம். குட் நியூஸாம், கங்ராஜ்லேஷனும், கண்ராவியாம், ஏதேதோ பேசி பாலுவின் கையைக்குலுக்கினான்.

பாலு யாரோ ஒரு பீகம் என்பவளை மணக்க அக்காவின் வீட்டிலேயே ஏற்பாடு செய்யப்போகிறானாம்: இந்த ரகஸியம் இப்போது புதை பாணம்போல் வெளியாகியதால் அம்மா விடம் இதை எப்படித் தெரிவிப்பது, அம்மா இதே ஏக்கத்தில் இதயம் வெடித்து இறந்துவிட்டால் என்ன செய்வது என்று பயமாக இருக்கிறதால் ஒன்றுமே தோன்றாமல் நான் உனக் காக வழி பார்த்துக்கொண்டிருக்கிறேன். இதை அம்மாவிடம் அப்பாவிடம் எப்படித்தெரிவித்துத்தடைசெய்யலாம் அல்லது ஒன்றுமே சொல்லாமலிருந்து விடலாமா! பரீக்ஷைக்குப் பணம் கட்ட இன்று எப்படி முயல்வது, என்று ஒரே குழப்ப மாயிருக்கிறது அக்கா! அதோ! இன்னொரு வெள்ளம் உள் ளிருந்து வருகிறது பாரு! நாம் ஒதுங்கி உள்ளே போய்விட லாம் வா! என்று பயந்துகொண்டு பின்னாலேயே சென்றான்.

புஷ்பா பயப்படாமல் வீதியிலேயே நின்று வருகிறவர் களையே கவனித்துக்கொண்டிருந்தாள். கருணா! நான் வருகி றேன். நீ சரியாக டயத்திற்கு அங்கு வந்து விடு...என்று சொல்கையில் கருணாவுக்கு வரும் பத்திரிகை வந்தது; அதை வாங்கி இவளுடைய சினேகிதை தான் முதலில் பார்த்தாள். இந்த ஜோடி தம்பதிகளையும் விஷயத்தையும் பார்த்த உடனே "அடேடேடே! இதோ பாரு! இதோ பெண்மணி! பெண் மணிகளுக்குள்ள பரிபூர்ண சுதந்திரத்தைப் பெற்ற பெருமை வாய்ந்தவள். அவளே சுதந்திரப் பறவைபோலச் சிறகடித்துப்

பறந்துத் தனக்கு இஷ்டமான மரத்தின் மீது உட்காருவது போல் மணம் செய்துகொண்டாள்! வெரிகுட்...நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்! என்று பத்திரிகையை எல்லோருக்கும் காட்டினாள்.

கருணா மிகுந்த பூரிப்புடன், பேஷ், அவள் சொல்லிய படி சாதித்துவிட்டாள். அக்காவுக்கும் ஸையத் உஸேனுக்கும், எப்போதோ விவாகமாகி இருக்கவேணும்; இந்தப்பாழும் வீட்டிலிருக்கும்வரையில் நடக்காதென்று தெரிந்துதான் வேலையைமாற்றிக் கொண்டு போய்விட்டாள். சாயபுதான் மாற்றலுக்கு ப்ரயத்தனம் செய்துகொடுத்துத் தானும் அதே ஊரில் மாற்றிக்கொண்டுசென்றார். இது எனக்குத் தெரியும்; தெரிந்துதான் நான் சொல்லவில்லை. வரவர எங்கம்மா வெறும் கட்டுப்புறமாகி வருகிறாள். ஆதியில் எல்லாம் இப்படி இல்லவே இல்லை. எத்தனையோ பேர்கள் கலப்புமணம் செய்து கொண்டார்கள்—அவைகளை எல்லாம் ஆமோதித்துப் பேசி ஆதரித்தனாளை எங்கம்மா மறந்தேபோய்விட்டதனால் தான் நாங்கள் எதையுமே அவளிடம் சொல்வதே இல்லை என்றாள்.

ஒருத்தி:—ஓ! உனக்கு ஏற்கெனவே விஷயம் தெரியுமா! அப்படியானால் நீயும்...

மற்றொ:—ஏன் ஏதோபோல் இழுத்துப் பேசுகிறாய்? அவளுக்கும் ஏற்கெனவே நிச்சயமாகிவிட்டது. மலையாள தேசத்தைச்சேர்ந்த தீயாஜாதிக்காரர் ஒருவர், இனிமேல் அதுவும் முடிந்துவிடும்.

இன்னொருத்தி:—இதோபாருங்கள்: நீங்கள் எல்லோரும் பேசுகிற பேச்சுமட்டும் இந்த ஒரு விஷயத்தில் எனக்கு சற்று கூடபிடிக்கவே இல்லை. எத்தனைதான் சுதந்திரமாக நாம் நாகரீகத்தில் முழுகித்திளைந்தபோதிலும் அவரவர்களுடைய சுயமரியாதையைவிட்டுவிட்டு மனம்போனபடி கற்புவிஷயத்தில் பங்கப்பட்டு நடப்பது கொஞ்சமும் நன்றாக இல்லை. இது எனக்கு மிகவும் அருவருப்பைக் கொடுக்கிறது. தன் தன் ஜாதியில்சரியான உத்தம புருஷன் கிடைக்காமலாபோவான்...

என்று முடிப்பதற்குள் எல்லோரும் ப்ரமிக்கும்படியாய் புஷ்பா சடக்கென்று இம்மாதிரி பேசியவளருகில் வந்து, தாயே! பராதேவதே! இத்தகைய குப்பைத்தொட்டிக்கூட்டத்தின் நடுவில் நீயொருத்தியாவது அதிக துர்நாற்றமற்றவளாய்க் காணப்படுகிறாயே! இதற்காக உனக்கு ஆயிரங்கோடி நமஸ்காரம். கற்பைவிலைக்குவிற்கும் சில மாதர்களைவிடகேவலமான ஈனபுத்தியுடன் இருக்கும் இந்தப்பாபப்பிண்டங்களை... மாமிசப் பருவதங்களை பகவான்...

என்றுகூறி முடிப்பதற்குள் கருணா அடங்காத ஆவேசமும் ஹுங்காரமும்கொண்டு இன்னதென்று விவரிக்கவியலாத

விதம் திட்டி பேய் அறைவதுபோல் அறைந்து, துஷ்ட நாயே! ஓடு....உள்ளே ஓடு! இத்தனை தைரியமா உனக்கு வந்துவிட்டது. அற்பப்புதரே! அசுரப்பூண்டே! என்று திட்டி காலால் உதைத்து இழுத்து சடாரென்று தள்ளினாள்.

இந்த ப்ரம்மராக்ஷஸச் செய்கையைக் கண்டு எதற்கும் அஞ்சாத அராக்கட்டைகள்போன்ற ராக்ஷஸிகள்கூட நடு நடுங்கிப்போய், நில்லு, நில்லு, கருணா! நில்லு, இதென்ன இப்படி அடித்துக் கொலைசெய்கிறாயே! உயிர் போய்விட்டால்...கைகால்கள் உடைந்துவிட்டால், எக்கச்சக்கமாக எங்காவது பட்டுவிட்டால்...என்று ஆளுக்கொரு வார்த்தைகள் சொல்லியபடியே தடுக்கமுயன்றும் அந்தப் பேயின் ஆத்திரம் அடங்காமல், ஒடிந்துவிட்டாலா...நன்றாக ஒடியட்டும். மூளையே கலங்கித் தவிக்கட்டும்...வாயடைத்துப்போகட்டும். இத்தகைய மூளைகெட்ட அனாகரீகப்பேய் எனக்குத் தங்கையாயிருப்பதை விட சாகட்டும். இதனால் எனக்கொன்றும் முழுகிப்போகவில்லை கண்ணனும் கண்ணன்! அவனுக்கு பதினாயிரம் கோபஸ்த்ரீகள் மனைவியாம், இதொரு புராணமாம். இதை வழிபட்டு வாரிக் கட்டிக்கொள்வதாம்! அதுபோல் எனக்குப் பதினாயிரம் தங்கை, தம்பி...சீச்சீ! அவமானம்! என்று தன்போக்காகத் தாறுமாறாகக் கத்தியவாறு சென்றாள்.

இவளைப்போலவே மூர்க்கத்தனமும் நாகரீக தடபுடலும் இருந்தாலும்கூட இச்செய்கையை அவர்களும் வெறுத்து கருணாவையே திட்டினார்கள்; இப்படிகூட ஒரு ராக்ஷஸகுணம் இருக்குமா என்று அவர்களுடைய உள்ளமும் வியந்தது.

இருளில் ஒளி
வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஆறாவது சுடர் ரூ. 1.4.0

முதல் பாகம்—1. இருளில் ஒளி 2. திருமகளின் திருவருள் 3. கனியும் கன்னியும் 4. உள்ளும் புறமும் 5. உள்ளொளி 6. மனநிம்மதி 7. ஒளியும் ஒலியும்.

இரண்டாம் பாகம்—1. ஒருபக்தனின் சந்தேகநிவ்ருத்தி 2. கோலும் கொடியும் 3. லகுவான உபாயம் 4. முடிவும் நடுவும் 5. தெய்விக இசையின் அற்புத சக்தி 6. மலையில் மலை 7. கோபியரும் உத்தவரும்.

குடந்தை V. O. வேதராமன்

பூமா

ரம்மியமான மாலை நேரம். அஸ்தமிக்கும் கதிரவனின் சிவந்த கதிர்கள் கன்னத்தில் சிவப்பேறிய புதுமணப் பெண்ணின் மனநிலையை உணர்த்தியது. ஆற்றங்கரையில் ஓங்கி வளர்ந்த ஒரு மாமரத்தின் கிளை ஒன்று நீரில் வந்து அளவளாவிக்கொண்டிருந்தது. அந்தக் கிளையில் உட்கார்ந்து நீரில் காலைத் தொங்கவிட்டுக்கொண்டு, நீரை வாரி வாரி இறைத்துக்கொண்டு அந்திக் கதிரவன் அழகிய செம்மை படர்ந்த ஒளியில் மாந்தளிர்கள்பட்டு பளீரென மின்னிப் பிரகாசித்துக் கொண்டிருந்ததை தன்னையே மறந்துப் பார்த்துக்கொண்டிருந்தான் ஜானகிராமன். அந்திக் கன்னியின் அழகிய அலங்காரங்களையும் படித்துறையில் வந்து மோதித் தளும்பும் நீரின் "களுக் களுக்" என்ற சப்த ஜாலங்கள் ஒன்றையும் கவனிக்காமல், மற்றைய காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவனுடைய சிந்தனையைக் கலைப்பதற்கென்றே வந்தவள் போல் தோன்றியது பத்தே வயது மதிக்கத்தகுந்த ஒரு சிறுமியின் வரவு. அலையென நெளிந்த கூந்தலை மிகவும் சிரமத்துடன் ஒன்று சேர்த்துப் பின்னிக்கொண்டிருந்தாள்.

அவனைப் பார்த்ததும் கண்களிரண்டும் ஆச்சரியத்தினால் அகலவிரிய அவனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். திடீரென்று ஒரு பெரிய கல் அவனுக்கு எதிரில் நீரில் வந்து விழுந்தது. அவன் முகம் எல்லா இடங்களிலும் தண்ணீர் வாரி அடித்தது. திடுக்கிட்டு கரையை நோக்கினான். அந்தக் குறும்புக்காரப் பெண் அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்! அவள் கண்களில் விஷமம் நிறைந்திருந்தது. அதைக் கண்டதும் அவன் முகம் கோபத்தால் "ஜிவ்" வென்று சிவந்தது. "இங்கேயும் வந்துவிட்டாயா" என்று கூவிக்கொண்டே கரையில் குதித்து அவள் சிவந்த கன்னத்தில் 'பளீர்' என்று ஒரு அறைவிட்டான் ஜானகிராமன். "ஹா" என்று அலறி தன் கன்னிச் சிவந்த கன்னத்தைத் தடவிக்கொண்டாள் அச்சிறுமி. அவள் கண்களில் கண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது. அவளைத் திரும்பிப் பார்க்காமல் 'விர்' ரென்று கிளம்பிப் போய்விட்டான். அவன் போனதிக்கையே இரக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள் அந்தப் பெண்; அவள் முகத்தில் எள்ளளவும் கோபம் இல்லை!

சந்திரசேகரபுரம் ஒரு அழகிய கிராமம். நீர்த்தாழ்ந்த பூமியானதால் சுற்றிலும் பசுமை மிக்க தோட்டந்துறவுகள் இருந்தன. அவை பார்ப்பதற்கு மிகவும் ரமணீயமாக இருந்தன. மாந்தோப்புகளும், தென்னந் தோப்புகளும் கிராமத்

திற்கே ஒரு தனி அழகைக் கொடுத்துக்கொண்டிருந்தன. அந்தக் கிராமத்தில் பெரிய தனக்காரர்களில் ஜானகிராம னின் அத்திம்பேரும் ஒருவர். அவன் கும்பகோணத்தில் ஒரு ஹைஸ்கூலில் ஆறுவது பாரம் படித்துக்கொண்டிருந்தான். கோடை விடுமுறைக்குத் தன் சகோதரியின் வீட்டிற்கு வந் திருந்தான். வந்து ஒருமாதம் உருண்டு ஓடிவிட்டது. எப் பொழுதும் ஆற்றங்கரையிலேயே தன் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான் ஜானகிராமன். ஏனென்றால் கிராமத்தில் அவனுக்குச் சரியாகப் பழகுவதற்குப் பையன்கள் இல்லை. பொழுதை மிகவும் கஷ்டத்துடன் கழித்துக்கொண்டிருந் தான் அவன்; ஊரைவிட்டுப் போகவும் மனமில்லை.

அதேசமயம் அவர்கள் வீட்டிற்குப் பக்கத்துவீட்டில் ஒருவர் குடிவந்தார். அவர் அந்த ஊருக்கு 'எக்சிகியூட்டிவ் ஆபீசராக' மாற்றிவந்தவர் அவர் பெண் பூமா ஜானகிராம னின் வீட்டிற்கு அடிக்கடிவந்து ஏதேனும் சாமான் இரவ லாக வாங்கிக்கொண்டுபோக வருவாள். அவள் சுறுசுறுப்பு ஜானகிராமன் மனதிலும் ஒருமாறுதலை உண்டாக்கியது. ஆரம்பத்தில் தூரவிலகிப்போய்க்கொண்டிருந்த பூமா பிறகு அவனிடம் எதிர்த்து எதிர்த்து வாயாடும் அளவுக்குப் பழகி விட்டாள். ஓழிந்தவேளையில் தன் பெண்ணுக்கு 'டியூஷன்' சொல்லிக்கொடுக்குமாறு அவனிடம் வேண்டிக்கொண்டார் பூமாவின் தந்தை. அவன் அவளிடம் நெருங்கிப்பழகுவதற்கு இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் இருக்கமுடியுமா என்ன!

அன்று மத்தியானம் சாப்பிட்டுவிட்டு தன கைக்கடிகாரத் திற்குச் சாவி கொடுத்துக்கொண்டிருந்தான் ஜானகிராமன். பக்கத்து வீட்டிலிருந்து தாவி ஓடிவந்த பூமா அவன்மேல் இடறிவிழுந்து அடுக்களையை நோக்கி ஓடினாள். மறுகணம் அவன் கையிலிருந்த கடிகாரம் நழுவிவிழுந்து உடைந்து துகள் துகள்களாகச் சிதறிவிட்டது. கோபம் தாளாத ஜானகிராமன் 'ஊரார் வீட்டுப் பெண்ணாயிற்றே' என்றுகூடப் பார்க்காமல் கையப்புடைத்து விட்டான். இதைக் கவனித்துக் கொண்டேவந்த அவனுடைய அத்திம்பேர் "ஊரார் வீட்டுப் பெண்ணை கைநீட்டியடிக்க உனக்கு என்ன உரிமையிருக் கிறது" என்று அவனைக் கன்னத்தில் 'பளீர்' என்று அறைந் தார். அப்படியும் அவரது கோபம் தணியவில்லை அவனைப் பார்த்து அடிக்கடி உறுமிக்கொண்டிருந்தார். அவள் தன் வலியையும் மறந்து அவனுக்காக அனுதாபப்பட்டுக்கொண் டிருந்தாள். என்றைக்குமே அடிவாங்கி அறியாத ஜானகி ராமனுக்கு துக்கம் பொறுக்கவில்லை. பீறிக்கொண்டுவந்த அழுகையை அடக்கியவண்ணம் வெளியே சென்றுவிட்டான்! பூமாவினால் அவனுடைய அப்போதைய முகத்தை மறக்கவே முடியவில்லை. தன்னால் தானே அவன் அடிபட்டான் என்ற எண்ணம் அவள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தது

மாலையில் ஆற்றங்கரையில் அவனைக்கண்டதும் அவனைச் சந்தோஷப் படுத்துவதற்காகவே அந்தக் கல்லைத்தூக்கி அவன் முன்னால் போட்டாள். ஆனால் அவன் கோபம் தணியாமையால் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. அவன் கோபம் கடைசிவரை தணியவேயில்லை. அவன் அன்றிலிருந்து அவளுடன் பேசுவதுமில்லை. பூமாவின் தந்தை 'டியூஷனை' நிறுத்தியதைப் பற்றிக் கேட்டதற்கு "விடுமுறை கழிந்துவிட்டது. ஊருக்குப் போகவேண்டும்" என்று மழுப்பிவிட்டான். விடுமுறை கழிந்ததும் பூமாவிடம் சொல்லிக் கொள்ளாமலே ஊருக்குப் போய்விட்டான். அவன் இப்படிச் செய்வானென்று அவள் நினைக்கவேயில்லை. ஊருக்குப்போகும் பொழுதாவது சொல்லிக்கொள்ள வருவான் என்று நினைத்திருந்தாள். அவன் பேசாமல் போனதை நினைத்ததும் அவளுக்கு எல்லையற்ற துக்கம் உண்டாயிற்று.

காலமலரில் எட்டு, ஒன்பது இதழ்கள் உதிர்ந்துவிட்டன. இதன் நடுவில் ஜானகிராமன் எவ்வளவோ தடவை சந்திரசேகர புரத்திற்குப் போயிருந்தான்; ஆனால் பூமாவைப் பார்க்கவில்லை, காரணம் அவன் அந்த ஊருக்கு முதல் தடவை வந்துவிட்டுப் போன ஒரு மாதத்திற்கெல்லாம் பூமாவின் தந்தைக்கு வேறு ஊருக்கு மாற்றலாகிவிட்டது. "எந்த ஊர்?" என்று கேட்டான் ஜானகிராமன் தன் சகோதரியிடம்; "தெரியாது" என்று பதில் வந்தது.

"மதுரை ஓரியண்டல்" கல்லூரியில் உதவி லெக்சரராகியிருந்தான் ஜானகிராமன் M. A மணி அடித்த உடனே வகுப்பில் நிதானமாக "டக்டக்" என்று 'பூட்ஸ்' அழகாக சத்தமிடக் கம்பீரமாக நுழைந்தான். வகுப்பில் நிசப்தம் நிலவியிருந்தது, மாணவர்கள் எல்லோரும் தங்கள் புது லெக்சரரையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தனர்.

அலையென நெளிந்த தன் கேசத்தைத் தடவிக்கொண்டு ஒவ்வொரு மாணவ மாணவிகளையும் பார்த்துக்கொண்டு வந்தான் அவன். திருப்தியும் பெருமையும் கலந்த புன்னகை யொன்று உதட்டில் நெளிந்தது. உண்மையில் அவன் சிறந்த அழகன்தான்! செக்கச் செவேலென ஆஜானுபாகுவாய் ஆள் வாட்ட சாட்டமாக இருந்தான். அவனையே கண்கொட்டாமல் விழுங்கி விடுபவள்போல் பார்த்துக்கொண்டிருந்த மாணவியின் பக்கம் சென்ற அவன் பார்வை நிலைத்து நின்றுவிட்டது! ஆச்சரியத்தினால் கண்களை 'மல மலங்க' விழித்தான் ஜானகிராமன். 'பூமா' என்று கத்தவேண்டும் போலிருந்தது! ஆம்! அந்த எக்ஸிகியூடிவ் ஆபீசரின் பெண் பூமாதான்! அவனுக்கு அவள் மீது இருந்த கோபம் எப்பவோ போய்விட்டது. பூமாவுக்கும் அதே நிலைதான் ஏற்பட்டது, அவன் தன் பெயரைச்சொல்லிக் கூப்பிடமாட்டானா? என்று இருந்தது அவளுக்கு. அவன் அவளையே உற்றுநோக்கி

யதைப் பார்த்ததும் அவள் ரோஜாக்கன்னம் 'குப்' என்று சிவக்தது. ஏற்கெனவே சிவக்த மேனி; அதில் நாணம் மெருகு ஏறியவுடன் ரத்தச்சிவப்பாக மாறிவிட்டது! அவள் குனிந்து கொண்டாள். மிகவும் பிரயாசையுடன் அவ்விடத்தில் நிலைத்திருந்த தன் பார்வையை அகற்றிக்கொண்டு அன்றையபாடத்தைத் தொடங்கினுன் ஞானகிராமன். தன் நேரம் முடிந்தவுடன் அவள் பக்கம் திருப்பிக்கண்களாலேயே விடைபெற்றுக் கொண்டு சென்றுன் அவன்

பூமாவின் தந்தை மதுரையில் தேவஸ்தான ஆபீஸராகயிருந்தார். அன்று மாலையே அவன் விலாசத்தை விசாரித்துக்கொண்டு அவன் வீட்டிற்குவந்தார். தன் பெண் படிப்பை இன்டரோடு நிறுத்திவிட்டு கலியாணம்செய்து விடவேண்டும் என்றெல்லாம் அவள் தந்தை பேசிக்கொண்டிருந்தார். கடைசியில் ஞானகிராமனின் ஜாதகத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டுபோனுர்; அந்த மாதமே சிரஞ்சீவி ஞானகிராமனுக்கும்சௌபாக்கியவதி பூமாவிற்கும் விவாகம் நடந்தேறியது.

ஞானகிராமனைத் தனியாகச் சந்தித்த பூமா, "கைக்கடிகாரம் வைத்திருக்கிறீர்களா" என்று குறும்புடன்கேட்டாள். பழைய ஞாபகத்தை நினைத்துக்கொண்ட ஞானகிராமன் "சீ! போக்கிரி" என்று அவள் கன்னத்தில் செல்லமாகத் தட்டினுன்.

வை. மு கோ. நாவல்கள். (தற்போது கைவசமுள்ளவை : 1953)

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 2-4
தயாநிதி
ஞானதீபம்
வாழ்க்கைத் தோட்டம்
ரூ. 2.
வானக்குயில்
ஆத்ம சக்தி
சந்தோஷ மலர்
கருணுலயம்
வாத்ஸல்யம்
மதுர கீதம்
அமுதமொழி (சாதா)
ஆசைப்ரவாகம்
வெளுத்த வானம்
மனத்தாமரை
அமரத்யாகி
ஜீவநாடி
பாதாஞ்சலி

ரூ. 1-12
அனுதைப்பெண்
புகழ்மாலை
இதய ஒலி
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணுடி
ஜயபேரிகை
நம்பிக்கைப் பாலம்
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
புதுமைக்கோயில்
க்ருபாமந்திர்
ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வீரவஸந்தா
நளினசேகரன்

மாலதி
வத்ஸகுமார்
பிரதிக்ஞை
ப்ரார்த்தனை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
இனிய மூரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனு
அணு. 12.
பக்ஷமாலிகா
சுடர்விளக்கு
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணேதயம்
மனச்சாட்சி
குலதனம்
அணு. 8
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரிய லக்ஷ்மி

மகாத்மாஜி ஸேவா சங்கம், திருவல்லிக்கேணி

மாதத்தில் மார்கழிமாதமாக நான் இருக்கிறேன் என்றான்பகவான். அதன் உண்மையை எத்தனையோ பேர்கள் தங்கள் வாழ்க்கையில் ப்ரத்யக்ஷமாகக் கண்டுகளித்து அனுபவித்திருக்கக்கூடும்; அதுபோல் நமது ஸேவாசங்கமும் 5 வருஷ காலமாகச் செய்யும் ஆத்மீகமானத் திருப்பணிகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் இந்த வருஷம் மார்கழி மாதத்தில் திருப்பாவை இசை கைங்கர்யம் ஸ்ரீகீதாசாரியன்க்ருபையினால் கிடைத்ததானது சங்கத்தின் பாக்யமென்றால் மிகையாகாது. மார்கழிமாதம் 30 தினமும் தப்பாமல் சங்கத்தில் அங்கத்தினர்களால் திருப்பாவை பஜனையும், தினம் ஒருவராக வெகு உத்ஸாகத்துடன் முறைவைத்துக்கொண்டு உபயமும்செய்து கடைசிதினம் போகிப்பண்டிகையன்று ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாண மகோத்ஸவம் சிறப்பாக நடைபெற்றது.

இதைத்தவிர இதற்கு இடையில்ஸ்ரீதிருப்பதி தேவஸ்தானநிலயத்தில் கதம்பவாத்ய இசையுடன் திருப்பாவை பாடும் பாக்யம் இரண்டு நாட்கள்கிடைத்தது.ஸ்ரீனிவாஸ காந்தி நிலயத்தில்(சங்கத்திற்கு சங்கம் பரஸ்பர அன்புகாட்டும் நோக்கத்துடன்) திருப்பாவை கோஷ்டியினர் கதம்பவாத்யத்துடன் திருப்பாவை பாடினர். ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமியவர்கள் சங்கத்தின் ஸேவைகளைப் ப்ராராட்டிப் பேசிதங்கள் நிலயத்தின் சார்பில் ஒரு வெள்ளிக் கோப்பையைச் சங்கத்திற்கு அன்பளிப்பாக அளித்துச் சிறப்பித்தார்கள். மாம்பலம் ராமக்ருஷ்ண ஹைஸ்கூலில் ஸ்ரீமான் காரப்பங்காடு ஸ்வாமியால் நடத்தப்பட்ட திருப்பாவை சாத்துமுறையை முன்னிட்டு கதம்பவாத்யத்துடன் திருப்பாவை பாடும் கைங்கர்யமளித்தார்கள்.

இதைத்தவிர திருவல்லிக்கேணியில் ராதாக்ருஷ்ண பக்த சபாவில் ராதா கல்யாண உத்ஸவத்தை முன்னிட்டு 15, 16, 19, தேதிகளில் பிற்பகல் மூன்று முதல் ஆறுமணி வரையில் ஸ்த்ரீகளுக்காக ப்ரத்யேக நிகழ்ச்சிகளை நமது சங்கமே ஏற்று மூன்று நாட்களும் பஜனை நடத்தி இன்புற்றது. முதல்நாள், ஸ்ரீமதி. ராஜரத்தினம்மாள் (லெக்சரர், லேடிவெலிங்டன் காலேஜ்) அவர்கள் தலைமை வகித்து அதி அதி அத்புதமாகப் பேசினார்கள். ஸ்ரீமதி A. ராஜம்மாள் ஸ்ரீ க்ருஷ்ணபக்தி என்கிற விஷயம் பற்றி சங்கீதத்துடன் உபன்யாஸம் மிக அபாரமாகச் செய்தார்கள். இரண்டாவது தினம், ஸ்ரீமதி. நீலாவதி ராம சுப்ரமண்யம் அவர்கள் தலைமை வகித்து வெகு திறமையுடன் பேசினார்கள். வை. மு. கோ. பெண்களும் கடமையும் என்பது பற்றிப் பேசினார்கள். மூன்றாவது நாள், ஸ்ரீமதி குகப்ரியை தலைமை வகித்து அமுத ப்ரவாகம் போன்று அரிய விஷயங்களைப் பேசினார்கள். ஸ்ரீமதி வஸுமதி ராமஸ்வாமியவர்கள், பெண்களும் பக்தியும் என்பது பற்றி மிகமிகத் தெளிவாயும் ஜனரஞ்சகமாயும் பேசினர். "நாட்டிய நடிக திலகம்" ஸ்ரீமதி நீலாபாலசுப்ரமண்யத்தின் நடராஜ நாட்டிய நிகேதன மாணவிகள் ராதாக்ருஷ்ண நாட்டியமும் மீராபாய் பஜனை நாட்டியமும் ஆடி சபாஷ்பெற்றார்கள். சங்கம் ஏற்றுக்கொண்ட கைங்கரியம் செவ்வனே செய்து முடிக்கப்பட்டது.

தை வெள்ளிக் கிழமைகளில் வழக்கம்போல் ஸ்ரீமகாலக்ஷ்மித் தாயாருக்கு உத்ஸவம் முறையே ஆரம்பித்து முதல் வெள்ளிக்கிழமை குமாரி. N. ராஜம் என்கிற 14 வயது சிறுமி (பிடில் வித்வான் மாஸ்டர் கிருஷ்ணனின் சகோதரி) தனிப்பிடில் வாசித்தாள். அதன் அத்புதத்தைச் சொல்லி முடியாது. கேட்டு அனுபவித்தால்தான் தெரி

யும். பிடிலின் தந்திகளில் அச்சின்னஞ்சிறுமியின் விரல்கள் நவநவமான திறமையுடன் நிர்த்தனம்செய்து நாத வெள்ளத்தை எழுப்பி ப்ரமிக்கச் செய்தது என்றால் மிகையாகாது. சிறுமியின் கைத்திறமா இது! என்று எல்லோரும் ஆர்பரித்தார்கள். அத்தனை அழகாய் அழுத்தமாய் அனுயாஸமாய் அருமையாய் வாசித்தாள். நம் சங்கத்தின தலைவி காயனபடு கீர்த்தனபடு ஸரஸ்வதிபாயை சபையோர்கள் வேண்டிக் கொண்டதன்பேரில் அவர்கள் இரண்டுதேவருநாமாக்களை அமுதவர்ஷம் போல் வர்ஷிக்கவும் அந்தச் சிறுமி பக்கவாத்யம் வாசிக்கவும் ஸ்ரீமான் சுந்தரம் மிக அருமையாக மிருதங்கம் வாசிக்கவும் கச்சேரி ஜமாய்த்து விட்டது. தேங்காய், பழம், முதலியவைகளுடன் எல்லோருக்கும் தாம்பூலம் மஞ்சள் குங்குமம் கொடுத்து விழா வைபவமாக நடந்தேறியது. இரண்டாவது வெள்ளிக்கிழமை சங்கத்து இசைக் கோஷ்டியினரே கதம்ப வாத்யத்துடன் பாடினார்கள்.

26-ந்தேதி, ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்ரமண்யம் அவர்கள் தலைமை யில் கூட்டம் மிகச்சிறப்பாக நடந்தது. M. O. அலமேலா கொடி ஏற்றினார்கள். சங்கத்தின் சேவகிகள் கொடி வணக்கம் பாடினார்கள். டாக்டர் V. C. அங்குளி மாதர்களின் கடமையைப் பற்றியும் உழைக்க வேண்டிய அவச்யத்தைப் பற்றியும் அமெரிக்கா, கானடா, முதலிய தேசங்களில் பெண்கள் எப்படி தமது காலத்தை வகுத்துக் கொண்டு வேலை செய்கிறார்கள் என்பதையும்பற்றி வெகு விரிவாயும் அழகாயும் பேசினார்கள். பிறகு, ஸ்ரீமதிமைதிலி பார்த்தஸாரதி, குமாரிவேதவல்லி, விஜயா, நந்தினி முதலியவர்கள் பாடினார்கள். சுகந்தவல்லி பாலிகா கழகத்தின் சார்பில் வெகு அழகாகப்பேசினாள். சுந்தரவல்லி அழகாகப் பேசினார். தேசீய கீதத்துடன் குடியரசுதின விழா முடிவடைந்தது.

இப்போதுதான் உல்லாஸ யாத்திரையாக நீர்வளூருக்குப் போய் வந்தது போலிருக்கிறது. இதற்குள் ஒருவருஷமாகி விட்டதா! என்று பிரமிக்கும்படி அதே திருவிழா 29ந்-தேதி நடைபெற்றது. அவ்வூர் வாஸிகளான பக்த அபிமானிகள் சங்கத்தை வெகுவெகு அன்புடன் அழைத்தார்கள். கொடுத்து வைத்தவர்கள்தான் இந்த உல்லாஸ யாத்திரையில் கலந்து கொண்டார்கள். அந்த ஆநந்தத்தை வைப வத்தை அனுபவித்தால்தானே தெரியும்;

அதிகாலை, உத்ஸாகமும் ஆனந்தமும் பூத்துக் குலுங்கும் உள்ளங் களுடன் கிளம்பி 9 மணிக்குள் ஊருக்குப்போய்ச் சேர்ந்தோம். அங் குள்ள அன்பர்களின் ஆனந்தம் ஒருபுறம, ஏராளமானவர்கள் திற ளாக வரவில்லையே என்கிற கோபம் ஒருபுறம்,ப்ரகாசிக்க வரவேற்றுச் செய்த உபசாரத்தை எழுதி சாத்யமில்லை. ஏற்கெனவே இந்த க்ரா மத்தைப்பற்றி சென்ற வருஷமே எழுதியிருக்கிறேன். 30-வது ஆண்டு மலரிலும் எழுதி இருக்கிறேன். அத்தகைய க்ராமாபிமானிகள் அன்பை அள்ளிக்கொட்டி இதயங்களையும், ஆகாரத்தை வாரி வழங்கி வயிற்றை யும், நிறைய வடித்துவிட்டார்கள். ஏரியில் ஜலம் நிறைந்திருக்கும் அழ கும் ஸ்ரீலக்ஷ்மி நாராயணப் பெருமாள் பவனி வந்த வைபவமும் அவர் அமுது செய்த ப்ரஸாத வகைகளை அந்த நிர்மலமான ஏரியில் நாங்கள் கூட்டமாக அமர்ந்து சாப்பிட்ட ஆனந்தத்தையும்எழுதிமுடியாது. அபி ஷேகம் ஆராதனை ஊஞ்சல், முதலிய வைபவமும் காணக் கண்கோடி வேணும். நம் சங்கம் செய்த பாக்யம் பஜனை கைங்கர்யமும் பிறகு ஊஞ் சலில் இசை கைங்கர்யமும் கிடைத்தது. மற்றொரு சகோதரர் மிகவும் நன்றாகப் பாடித் தானும் கைங்கர்யம் செய்தார். கோயில் திருவிழா

பூர்த்தியாவதற்கு இரவு 1 மணியாயிற்று. க்ரகணமாகையால் அத்தனை சீக்கிரம் முடிந்துவிட்ட தென்னலாம். அந்த க்ராமத்தில் தெருக்கூத்து நடப்பதையறிந்து அதற்குப்போய் கண்டுகளித்துவிட்டு மூன்று மணிக்கு வந்து படுத்தோம். காலை பட்டணம் வந்து சேர்ந்தோம்.

மகாத்மா அமரத்வமடைந்த சர்வோதய நாள். பகல் 2 மணிக்கு சங்கத்து பஜனை கோஷ்டி வழக்கப்படி ராஜாஜி ஹாலுக்குச் சென்று பஜனை செய்துவந்தோம். மாலை சங்கத்தில் கூட்டம் நடைபெற்றது. A, ராஜம்மாள் தலைமையில் கூட்டம் சிறப்பாக முதலில் கீதா பாராயணத்துடன் ஆரம்பமாகியது. மகாத்மாவின் சீரிய வாழ்க்கையில் சில முக்யத்வங்களை வெகு அழகாக ராஜம்மாள் பேசியதுடன் காந்தி ராமநாமத்தை ப்ரசாரம் செய்த சத்யசந்தர் என்றும் பகவத்கீதையையே தன்னுடைய உயிராகக் கொண்டதனால் க்ருஷ்ண பக்தரும் ஆவர் என்றும் சாம்யம் காட்டி வெகு திறமையாய் ரஸமாய்ப் பேசினார்.

பம்பாயிலிருந்து வந்திருக்கும் ஸ்ரீமதி நாகலக்ஷ்மியம்மாள் அவர்கள் சங்கத்திற்கு வந்திருந்தார்கள். பம்பாயில் மாதர்சங்கம் நடக்கும் விவரங்களைப்பற்றியும் மகாத்மாவின் சிறப்பைப் பற்றியும் நம்சங்கத்தின் பால் தனக்குள்ள பேரபிமானத்தைப் பற்றியும் சங்கத்திற்காத்தான் பம்பாயிலிருந்தபடியே உதவி செய்வதாயும் வெகு உத்ஸாகத்துடன் பேசினார். பிறகு, A. ஸரோஜாபாய் காந்தீயம், 5 வருஷ திட்டம், முதலியவைகளைப் பற்றிப் பேசினார். M. C. ஜானகியம்மாள் நீர்வளூர் உல்லாஸயாத்திரையின் வைபவத்தைக்கூறி மகாத்மா காந்தியடிகளின் பெயருள்ள சங்கத்தின்மூலம் தான் இத்தகைய ஒருசந்தர்ப்பம் கிடைத்தது என்றும், மகாத்மாவின் நாமமே இந்தப்புகழை கொடுக்கும் சக்திவாய்ந்தது என்றும் பேசினார். பஜனை வந்தனோபசாரம் இவைகளுடன் கூட்டம் இனிது முடிந்தது.

பக்தி மலர்கள்

பசு நமது நாட்டின் செல்வம். வீட்டின் செல்வமும் கூட; பசுவை கோமாதா என்று பாராட்டிப்போற்றித் தொழுவது நமது நெடு நாளைய வழக்கம். பசுவைக்கலியிலே காமதேனு என்று பெருமைகொடுத்துப்பேசுகிறது புராணங்கள்: இதற்குச் சான்றாக விளங்குகிறது மாட்டுப்பொங்கல் என்னும் திருநாள். பூஜ்யமகாத்மாஜீ அவர்கள் தமது பதினெட்டு நிர்மாணத் திட்டங்களுள் ஒன்றாக "கோஸேவை" அதாவது பசுக்குலத்துக்கே பணி செய்வது என்பதை வகுத்திருக்கிறார். இப்படி அன்று தொட்டு இன்றுகாறும், பசு நமது குலதெய்வமாக வழிவழியே பூஜிக்கப்பட்டுவந்திருக்கிறது. இந்தக் குலதெய்வத்தைக் குலதனம் என்ற பெயரால் நடுநாயகமாகவைத்து இதைச்சுற்றி ஓர் அழகிய கற்பனையைப் பின்னி அளித்திருக்கிறார் வை. மு. கோ. அவர்கள். இன்றும் நம்முடைய கிராமங்களிலும் நகரங்களிலும் பசுவினாலேயே பிழைப்பவர் பலரையும் காண்கிறோம். அதன் பாலாகிய அமுதத்தோடு கானமுதத்தையும் நாம் கலந்து உண்ணும்படி இந்த அருமையான குலதனத்தோடுபஜனம்ருதத்தையும் நமக்கு அளித்திருக்கிறார். அவரது கற்பனைத்திறனைப்பற்றி அவரது நூற்றெட்டாவது நாவலே சொல்லும்: அது தெளிந்த நீரோடையாகப் பெருகி

நமது நெஞ்சங்களையெல்லாம் குளிர்விக்கிறது. அந்த நீரோட்டத்திலே அழகிய மலர்களும், இலைகளுமாகக் காட்சிதருகின்றன நாவல், நாடகங்கள், சிறுகதை, பலசரக்கு முதலிய பல்வேறு வகைகளும். குலதனம் பஜனாம்ருதம் நிர்மல நீரோடை மூன்றும் ஒன்றைவிட ஒன்று சிறந்ததாகக் காணப்படினும் பஜனாம்ருதமே இதன் ஸாரம் என்பதையும், எம்பெருமானது அநந்த கல்யாண குணங்களைப் பாடுவதே பிறவிப் பெரும்பயன் என்பதையே இவை வற்புறுத்திப் பேசுகின்றன. ஆகவே இது வாழ்விற்கே வழிகாட்டியாக விளங்குகிறதுஎன்பதைச்சொல்ல வேண்டியதில்லை. ஆசிரியையின்கற்பனைத் தறிகளின்றும் இத்தகைய அழகிய பக்திமலர்கள் மேல்மேலும்பெருகவேண்டுமென்பதே பிரார்த்தனை: அதுதான் கீதாசாரியனது போதனையும்:

பக்திசெய்து பிழைக்கச்சொன்னான்—கண்ணன்
பலனை எண்ணாமல் உழைக்கச்சொன்னான்.

இதைச் செயலாகச்செய்து காண்பிக்கிறார் வை. மு. கோதை நாயகி அவர்கள்.

—துகப்ரியை.

"...I read these publications with great interest. They depicted life pictures. The novels were of absorbing interest and the readers at home were compelled to read them at one stretch. I wish your journal great success. I congradulate the Editress on her Annual Special, the 108th production. It took me back to 1907 and onwards when I had the opportunity of living in Triplicane..." கோவை அட்வகேட், C.R.ராமஸ்வாமி ஐயங்கார்.

தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய, மூன்று புத்தகங்களும் வரப்பெற்று பேருவகையடைந்தேன். சுருங்கச் சொல்லின், நிர்மல நீரோடையில் ஆழ, மூங்கி முழுகி ஸ்நானஞ் செய்து, ''பஜனாம்ருத''த்தைப்பருகி ''சாந்தியின் சிகரத்தை'' எட்டிப்பிடித்தேன் என்றால் மிகையாகாது.

காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராசார்ய சுவாமிகள், எத்தகைய ஆஸ்திகப்பிரசாரத்தை செய்யும்படி ஆக்ஞாபித்திருக்கிறார்களோ, ராஜாஜி அவர்கள், சமயம் வாய்த்த போதெல்லாம், எத்தகைய ஆத்மீக உபதேசத்தைச் செய்கிறார்களோ, அத்தகைய ஆத்மீக ஒளியை, இம்மைக்கும் மறுமைக்கும், ஏழேழும்பிறவிக்கும், ஜென்மத்தை உய்யவைக்கும் பேரொளியை தாங்கள், தங்கள் மலர்க்கரத்தால், படிப்பவர் உள்ளங்களில் ஏற்றிவைக்கிறீர்கள். தங்கள் ஹிருதயத்திலிருந்து பொங்கி வெள்ளமாகப் பிரவகிக்கும் பக்தி, நம்பிக்கை, இறைவன்பால் அசையாத உறுதி, திடசித்தம் பரந்த உள்ளம், அன்புப்பிரவாகம், ஆகிய நானாவித உணர்ச்சிகளும், ஒவ்வொரு ஏட்டிலும், வரியிலும், எழுத்திலும், பொங்கிப்பிரவகிப்பதைக்காண என்னுள்ளம் உவப்படைகிறது. என்னுள் எழும் உணர்ச்சிகளை எழுத்தில் வடிக்கத்திறனில்லேன்....

—கு. மல்லிகைசுந்தரம்.

[இடமின்மை காரணத்தால் மேலும் வெளியிட இயலவில்லை.]

133174

[ராப்பர் 2-ம் பக்கத் தொடர்ச்சி.]

ஸ்ரீ கீதாசாரியன் திருவடிகளுக்கே அர்ப்பணம்.

வாசக மகனீயர்களுக்கு விக்ஞாபனம். கருணாமூர்த்தியின் திருவருள் கடாக்ஷத்தினால் இந்த 30வது ஆண்டின் காயத்ரி மலரை பொங்கல் புது நாளன்று அவனுடைய திருவடித் தாமரைகளில் சமர்ப்பித்து மகிழும் பாக்யம் கிடைத்தது.

இதற்கு முன்பு வெளியிட்ட மலர்களில் பலபேர்களுடைய விஷயவிருந்துகளை விசேஷ ஓவிய அணியுடன் கொடுத்துக் களித்த மோகினிக்கு இந்த முப்பதாவதாண்டில் புதியமாதிரியில் ஒரு மலரைச்சமர்ப்பிக்க ஆசைகொண்டு 30 வதாண்டின் அறிகுறியாய் 30 விஷயங்களையும் நானே எழுதி வெளியிட வேண்டும் என்கிற ஆவலை இதயத்தில் புகுத்தினான் பகவான்.

அந்த உத்ஸாகத்தில் இந்த விஷயத்தை மோகினியில் ('52 டிஸம்பர் இதழில்) வெளியிட்டதைக் கண்ட சில ஆப்தனேகிதர்கள் கூட.... இம்மாதிரிப் போட்டுவிட்டாயே! இந்தக் குறுகிய கால தவணையில் இதை நிறைவேற்ற உன்னால் முடியுமா! பாதாஞ்சலியும் சாக்தியின் சிகரமும் எத்தனை தாமதமாக வெளியாகியது? அப்படிக்கிருக்க இத்தகைய காரியம் சாத்யமா என்று கேட்டார்கள்.

அப்போது மனத்தில் சற்று பயமே தோன்றியது: எனினும் இத்தகைய ஆசையை—தமிழ்ப்பத்திரிகையுலகில் இதுவரை கண்டிராத புதுமைக் கனவை நனவாக்கும் பேராவலை — உண்டாக்கிய கீதாசாரியன் தன் வேலையைத்தானேசெய்து முடிக்காமலா போவான் என்கிற ஒரு மகத்தான நம்பிக்கை இதயத்தில் பலமாயிருந்தது. அந்த நம்பிக்கையை நிறைவேற்ற என்னப்பன் இரவுபகல் வேலைசெய்யச் சக்திகொடுத்து குறித்த தவணைக்குள் மலரை முடித்தும் கொடுத்து விட்ட அத்புதத்தை என்னென்று வியப்பது! சகலமும் அவனருள்.

இந்த நிர்மல நீரோடை காயத்ரி மலர் நிரந்தரமான புத்தகஜாபிதாவில் சேர்ந்ததேயன்றி முந்திய மலர்கள்போல் ஒரு முறை வெளியாகி அதோடு மறைந்து விடுவதல்ல. ஒரு பதிப்பு தீர்ந்தால் மறு பதிப்பு வெளியிடப்படும். இதிலடங்கியுள்ள 7 பகுதிகள் — 31 உருப்படிகளுள் முதல் அம்சத்தின் பெயரையே முழுநூலும் தாங்கி வெளியாகியுள்ளது. எழுத்தோவியங்களுக்கே முக்யத்வம் கொடுக்கும் முறையில் ஓவிய அணி குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் புத்தகம் அச்சுவேலை முடிக்கப்பட்டது.

பகவத்ஸங்கல்பம் எவ்வளவு முக்யமோ அவ்வளவு மனிதயத்னமும் உழைப்புமன்றோ! நமது அச்சக ஊழியர்கள் மிக்க குறுகிய காலத்தில் ஒய்ச்சல் ஒழிவின்றி உழைத்து இதைத் தேதிப்படி வெளியிடச் செய்திருப்பதைப்போற்றி வாசகர்களுக்குத் தெரிவிப்பது எனது கடமை.

வாசக மகனீயர்கள் என்றும் போல் போஷாதரவுடன் இதையும் ஆதரித்து உதவ வேண்டுமாய்க் கோருகிறேன்.

நந்தன ஹூ மார்கழிமீ 30உ வங்கக்கடல். வை. மு. கோதைநாயகி.

அஜந்தா சித்திரங்கள்

அஜந்தா ஓவியங்களில் காணப் படும் வனிதாமணிகளின் வனப்பும் தேக அமைப்பும் இன்றையஸ்த்ரீகள் பலரிடத்தில் காண்பதரிதாயிருக் கிறது; விறுபெற்ற தாய்மைக்கு லாயக்கற்றவர்களாயுள்ளனர் பலர்.

அருணவை அனுதினமும் உபயோ கித்தால் ஸத்ரீகளின் ப்ரத்யேகக் கோளாறுகளனைத்தும் தீர்ந்து திட காத்திரமும் தூய்மையான தாய்மை யும் ஸித்திக்கும்

அருணா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கர்ப்பாசயரோகங்களை நிவர்த் தித்து பெண்மைக்குப் பெருமை யளிக்கும் ஔடதம்.

ஆயுர்வேதாச்ரமம் லிமிடெட்

சென்னை. 17.

தமிழ்ப் பத்திரிகையுலகிலேயே
ஒரு புதுமையாக
ஒரே ஆசிரியையின்
பேனாவிலிருந்து
ஸப்த ஸ்வரம் போன்று
ஏழு அம்சங்களுடன்
(31 உருப்படிகளுடன்)
தமிழ்ப் பூங்கொத்தாக
உருவாகியுள்ளது.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI NAYAKI AMMAL is printed and published by V. M. PARTHA SARATHY at the Jaganmohini Press, 26. Car St., Triplicane, Madras. 5. *Managing Editor:* V. M. SRINIVASAN. M.A.B.L.